# புலவர் தேறல்




சைவப்புலவர்

**சு. வல்லிபுரம்**

# புலவர் தேறல்

சைவப்புலவர் சி. வல்லிபுரம்

வள்ளுவன் வெளியீடு

நூல்: புலவர் தேறல்
(கவிதைகள், கட்டுரைகள், சிறுகதை)

ஆசிரியர்: சைவப்புலவர் சி. வல்லிபுரம்

முகவரி: திருவள்ளுவர் அகம்,
வதிரி,
கரவெட்டி.

உரிமை: வல்லிபுரம் யோகேந்திரா

முதற்பதிப்பு: மாசி 1990

ஓவியம்: ரமணி

அச்சுப் பதிப்பு: அபிராம் அச்சகம்
அல்வாய்.

விலை: 25,-

உள்ளே............


- கடவுள் வாழ்த்து
- எங்கள் உரை
- வாழ்த்துப்பா
- என் வரலாறு


கவிதைகள்


- பொங்கு பூவற்கரை விநாயக மூர்த்தியே!
- ஆணைமுகன் பாங்கரிலே தெள்ளு தமிழ் முருகன்
- குன்றக்குடிக் குமரன்
- காவல வருக!
- சிந்தித்து எழுமின்!
- குரு வாழ்க
- காந்தியின் சாதனை
- தமிழ்பேசும் ஓரினத்தார் தாய்
- சொல்லு தூது
- தன்மானத் தமிழன்
- காந்தீயம்
- வாழு கவி!
- மொழிப் பெருமை
- வீர மறவன்

கட்டுரைகள்

- ⊙ சைவத்தின் பெருமை
- ⊙ காந்தீயம் பரவிவரும் வேகம்
- ⊙ உயர்வும் தாழ்வும்
- ⊙ திருவள்ளுவர் கண்ட சேமநிதி வங்கி
- ⊙ இதுவும் காந்திஜி காட்டிய வழியே!

சிறுகதை

- ⊙ தெளிவு

உ

சிவமயம்

## கடவுள் வாழ்த்து

கும்பிடுவார் வேண்டுங் குறைதீர்த் தருநிதியம்
அப்புவியில் ஈபவனே ஐங்கரனே — தும்பிமுகக்
கன்றேபூ வற்கரைவாழ் கற்பகமே காவலனே
நன்றே அருள்வாய் நமக்கு.

# எங்கள் உரை

எங்கள் தந்தையார் சைவப்புலவர் சி. வல்லிபுரம் அவர்கள் மூன்று தலைமுறையினரான மாணவ பரம்பரையினரை உடையவர்கள். முப்பத்தாறு ஆண்டுகள் ஆசிரியப் பணி ஒன்றினையே தமது உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்துவந்த போதும், இலக்கிய ஆக்கங்களையும் அவ்வப்போது உருவாக்கி வந்துள்ளார்கள். அவைகள் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்திருப்பதுடன், சிறிய பிரசுரங்களாகவும் அச்சேறி இருக்கின்றன. அவைகளோடு கையெழுத்துப் பிரதிகளாகப் பேணப்பெற்ற ஆக்கங்களும் பல ஆகும். தந்தையாரின் ஆக்கங்கள் யாவும் நூலுருப் பெறுவதாயின் பாரிய நூல்கள் சிலவாகவேனும் அவை அமையும்.

கடந்த 29-01-90ல் காலமான எங்கள் தந்தையாரின் இலக்கியப் படைப்புகளைக் குறுகிய காலத்துக்குள் நூலாக்க வேண்டுமென்னும் எமது விருப்புக்கமையவே இந் நூல் சிறுகத் தொகுக்கப் பெற்றுள்ளது. 'தேவரையாளி இந்து' விலும், 'பவளவிழா மலரி'லும் இடம்பெற்றுள்ள எங்கள்

தந்தையாரின் ஆக்கங்களும், சிறுபிரசுரங்களாக வெளிவந்திருக்கும் படைப்புகளும் இந்நூலுக்கான தெரிவில் இடம் பெறவில்லை. ஏனைய சிருஷ்டிகளிலிருந்தே இந்த நூல் தொகுக்கப் பெற்றுள்ளது.

எங்கள் தந்தையாரின் அன்புக்குரிய மாணவனும், எங்களின் மதிப்புக்குரிய (கனிஷ்ட புதல்வர்களின்) ஆசானுமாகிய எழுத்தாளர் தெணியான் அவர்கள் இந்த நூலைத் தொகுத்து, ''புலவர் தேறல்'' எனத் தொகுதிக்கு மகுடம் சூட்டித் தந்துள்ளமை எங்கள் தந்தையாருக்கே பெருமை சேர்க்குமென்பதனை எண்ணி நாங்கள் மகிழ்கின்றோம். இந்த நூலில் இடம்பெற்றுள்ள அழகிய ஓவியத்தினைப் பிரபல ஓவியர் ரமணி அவர்கள் மிகக்குறுகிய காலத்துக்குள் வரைந்து உதவியுள்ளார்கள். அச்சேற்றும் பொறுப்பினை அபிராம் அச்சக உரிமையாளர் திரு. தி. ஸ்ரீதரன் அவர்கள் மனமுவந்தேற்று நூலுருக் கொடுத்துள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் எங்களது உளமார்ந்த நன்றிகள் என்றுமுண்டு.

எங்கள் தந்தையார் மீது நாங்கள் கொண்டுள்ள பவித்திரமான உணர்வினை, அவரது ஆக்கங்களை நூலுருவிலாக்கி, தமிழன்னையின் தாள்களில் இந்தப் 'புலவர் தேறலை'ச் சமர்ப்பிக்கின்றோம்.

திருவள்ளுவர் அகம்,
வதிரி,
கரவெட்டி.
06-02-1990

இங்ஙனம்
இ. திலகவதி
வ. சரத்சந்திரா
வ தயானந்தா
வ. யோகேந்திரா

# வாழ்த்துப்பா

நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர்

''வாழிய பெரிதே! வாழிய பெரிதே!
ஆழிசூ ழுலகி னரும்புகழ் பரப்பி
ஊழி யூழி வாழிய பெரி'' தென
மங்கலச் செந்தமிழ் மதுர நன்மொழி
பொங்கிய மகிழ்ச்சியிற் புகன்று வாழ்த்துமின்

இடப்பால் முப்பத் திரண்டறம் வளர்க்க
வலப்பா லுயிர்புரி வல்வினைப் பலிதேர்
இருபா லொன்றிய வொருதனி யுருவத்
தாதிநா யகற்கு வேதமுத லோதியும்
விந்த மடக்கி விரிநீர் குடித்த

சந்தனப் பொதியத் தவமுனி வேண்ட
வண்டமிழ் மும்மை வாரிதி வழங்கியும்
தொக்க வல்வினை துலைநே ரொத்த
மிக்கமெய்ஞ் ஞானம் பக்குவர்க் கருளியும்
உலகெலாம் வணங்கும் பரமகுரு வாகி

ஆறுமா முகமு மாறிரு நோக்கமும்
ஏறுமா மயிலு மிலங்குசுடர் வேலும்
பன்னிரு தோளும் பாவையர் பாகமும்
என்னிரு கண்ணு மிறையும் விட்டகலாப்
புண்ணிய புராண பூரண ஞானப்

பண்ணியல் நாத பரிபுரத் தாளுமாய்
அந்தமி லருளுருக் கொண்டயன் மால்துதி
கந்த வனத்துக் கலந்துவீற் றிருக்கும்
பலர்புகழ் நன்மொழிப் புலவர் தம்பெருமான்
திருவரு ளாலே வருமொரு மைந்தன்

விரவுநற் புகழ்கால் வதிரியம் பதியிற்
குலமுறை யோங்கி வழிவழித் தழைய
விரிகதிர் பரப்பி யெழுதரு மதியம்
தேவரை யாளிச் செல்வநூற் கழகத்து
நாவுரை மேன்மை நலந்தரு மாசான்

அளந்துகண் டறியாப் பழந்தமிழ் நூல்கள்
வளம்பெறக் கற்ற இளந்தமிழ்ப் புலவன்
எல்லவ ரும்புகழ் வல்லிபு ரம்என்னும்
நல்லிய னுமம் நயந்தவ னிந்நாள்
மெய்வரு சைவ வியன்பெரு நூலறி

சைவப் புலவனு மாயின னதனுல்
தண்டமிழ் வளனுஞ் சைவ மாட்சியு
மென்றிரு திறனு மியாவர்க்கும் வழங்கிச்
செம்மை மனத்தொடு சீரினு மோங்கி
இன்னமும் நன்னிலே யெய்திட
நன்மொழிப் புலவீர் நயந்துவாழ்த் துமினே.

---

★ சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம் நடத்திய ''சைவப்புலவர்'' பரீட்சையில் ஆசிரியர் சித்தி யெய்திப் பட்டம் பெற்ற போது நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் அவர்களால் 03-01-1940ல் வழங்கப்பெற்ற வாழ்த்துப்பா.

# என் வரலாறு

நான் வதிரியில் 28-10-1905ல் ஆ. சின்னத்தம்பி ஆனந்தம் தம்பதிகளுக்கு இரண்டாவது புதல்வனுகப் பிறந்தேன். தந்தையார் சளுத்துறையில் ஒரு சிறு கடை வைத்துத் தொழில் நடத்தித தமது சொந்த உழைப்பால் ஊரிலே சில காணிகளை வாங்கியிருந்தார். பத்துப் பன்னிரண்டு வருடக் குடும்ப வாழ்வின்பின் உயிர் துறந்தார்.

1910ம், 12ம் ஆண்டளவில் தச்சுத்தொழில் வல்லுநராகத் திகழ்ந்த கரவெட்டி திரு. கா. சூரன் அவர்கள், கரவெட்டி மணியகாரன் சிற்றம்பல முதலியாருடைய சைவப் பள்ளிக்கூட வேலைகளிலும், கோயில் வேலைகளிலும் ஈடுபட்டிருந்த காரணத்தால் மச்சமாமிசம் புசித்தலை நீக்கி விட்டார். மணியகாரன் அவர்கள் தங்கள் சமூகத்துக்குச் செய்துவருவது போலத் தானும் எங்கள் சமூகத்துப் பிள்ளைகள் கல்வி கற்பதற்காக ஒரு சைவப் பள்ளிக்கூடத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். தனது விருப்பத்தை மணியகாரன் அவர்களுக்கு வெளிப்படுத்தி அவர் ஆலோசனைகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

1914ம் ஆண்டில் நான் வதிரி மிஷன் பாடசாலையில் முதன்மூன்று வகுப்புக்களையும் படித்து முடித்துவிட்டு நான்காம் வகுப்புப் படிப்பை ஆரம்பித்திருந்தேன். அங்கு சகல மாணவர்களுக்கும் கிறீஸ்து சமயபாடம் போதிக்கப் பட்டது. அங்கு கற்பித்துவந்த சைவசமயத்தைச் சேர்ந்த ஒரேயொரு ஆசிரியராகிய அல்வாய் திரு. க. வேலுச்சோதிடர் அவர்கள் சைவப் பிள்ளைகளுக்குக் கவிச்சட்டத்திலே சைவத்தோத்திரப் பாடல்களை எழுதிக்கொடுத்து மனனம் செய்வித்து வந்தார். இந்த ஆண்டில் அவர் அதனைச் செய்யக்கூடாதென்று மிஷனரிமாரால் கட்டளையிடப் பட்டது. இதனுல் அதிருப்தி அடைந்த வேலுச்சோதிடர் அல்வாயிலுள்ள தமக்குச் சேர்ந்த ஒரு சில பிள்ளைகளைப்

பாடசாலையிலிருந்து மறித்து அல்வாயிலுள்ள ஒரு வீட்டில் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திவந்தார்.

சிலநாட் சென்றபின்பு கட்டைவேலிச் சேர்ச்சிலே நடந்துவந்த சமயபாடப் பரீட்சைக்குப் பலர் தோற்றி யிருந்தோம். அவர்களுள்ளே நான் மிகத் திறமை காட் டியபடியால் எனக்குச் சில கிறீஸ்து சமயப் புத்தகங்கள் பரிசாகத் தந்தார்கள். இதனைக் கேள்விப்பட்ட திரு. சூரன் அவர்கள் வதிரிக்கு வந்து வைத்தியர் க. வே. சின்னப் பிள்ளை அவர்களோடு கலந்துபேசி அவரை மிஷன் பாட சாலை ஆசிரியர்களை அணுகிச் சைவப்பிள்ளைகளுக்கு கிறீஸ்து சமயம் போதிக்கவேண்டாமென்று சொல்லுவித்தார். மிஷன் பாடசாலை ஆசிரியர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அடுத்தடுத்த நாட்களிலே வதிரிப் பிள்ளைகளும் பலர் மறிக் கப்பட்டனர். இந்தப் பிள்ளைகள் எல்லோரும் சின்னப் பிள்ளை வைத்தியருடைய வீட்டிலே வைத்து அவராலும், அவர் மருகர் கரவெட்டி க. சின்னத்தம்பி என்பவராலும் சிலநாட்கள் படிப்பிக்கப்பட்டனர். கிளர்ச்சி வலுவடைந்து பல ஊர்களிலுமிருந்து பிள்ளைகள் வரத்தொடங்கியதால் பலரின் ஆலோசனைப்படி வைத்தியருடைய காணியாகிய பள்ளந்தோட்டத்துக்குள் (இப்பொழுது கிணறு இருக்கு மிடம்) ஒரு கொட்டில் போட்டு வதிரி, அல்வாய் தெற்கு, வடக்கு, கொற்றாவத்தை, பூமாஞ்சோலை முதலிய ஊர் களிலிருந்து வந்த பிள்ளைகளையும் சேர்த்துப் பாடசாலை நடத்தப்பட்டது. அங்கு கரவெட்டி க. சின்னத்தம்பி, அல்வாய் வேலுச்சோதிடர், அல்வாய் வடக்கு மு. கந் தப்பு, மாறும்புலம் பெரியதம்பி என்பவர்கள் ஆசிரியர்க ளாகக் கடமையாற்றினர். பூரணைதோறும் திருவாளர்கள் சூரன், சிலம்பு வைத்தியர், வேலுச்சோதிடர் என்பவர் களால் சைவப்பிரசங்கம் நடத்தப்பட்டது.

வரவரப் பிள்ளைகள் அதிகரித்து வந்ததாலும் பலரு டைய ஆதரவைப் பெறவேண்டியிருந்ததாலும் ஓர் ஊரி லேயே நிலையான கட்டிடத்தை எழுப்பக்கூடாது என்ற

பரந்த நோக்கத்தாலும் மேலே குறிப்பிட்ட எல்லா ஊர்களுக்கும் மத்தியாகிய ஓரிடத்தில் (இப்பொழுது பள்ளிக்கூடம் இருக்கும் இடம்) காணிவாங்கிப் பெரிய கொட்டில்கள் போட்டுப் பாடசாலை நடந்துவந்தது. 1917ம் ஆண்டில் நிலையான கட்டிடம் கல்லால் கட்டிமுடிக்கப்பட்டது. இந்த மூன்று வருடகாலமும் நாங்கள் ஒரே வகுப்பிலேயே இருக்க நேர்ந்ததை அறிந்த திரு. சூரன் அவர்கள் தச்சுவேலை காரணமாகக் கத்தோலிக்கர் மத்தியில் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி என்னையும் வேறு சில மாணவர்களையும் சாமியன் திருஇருதயத் தமிழ்ப் பாடசாலையில் சேர்த்தார். அப்பொழுது அங்கே 8-ம் வகுப்புவரை பொதுக்கல்வியும் பின்பு மூன்று வருடங்கள் மாணுக்க உபாத்தியாயர் (*Pupil Teacher*) பயிற்சியும் அளிக்கப்பட்டு வந்தன. அங்கு நான் 4-ம் 5-ம் வகுப்புக்களைப் படித்து முடித்தேன். பின்பு அப்பாடசாலையை விட்டு நீங்கி குருநாகல் சென்று மாமனுர் சி. க. ஆறுமுகம் அவர்களுடைய கடையிலிருந்து அங்குள்ள ஆங்கில பாடசாலை ஒன்றிலே சேர்ந்து படித்து மூன்றுவருட முடிவில் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் 5-ம் வகுப்பைப் படித்து முடித்தேன். மேலே படிப்பைத் தொடர முடியாமைக்கும் அங்கு வசிக்க முடியாமைக்கும் அடிக்கடி ஏற்பட்ட மலேரியாக் காய்ச்சல் காரணமாக இருந்தது. அதனுல் குருநாகலை விட்டுவிட்டுக் கொழும்பு சென்று நம்மவர் செய்துவந்த பாதஅணித் தொழிலாளியாய் அத்தொழில் மூலம் வாழ்க்கையை ஆரம்பித்தேன். அதிலிருந்து கடையில் விற்பனையாளராயும், கணக்கப்பிள்ளையாயும் உயர்ந்து அக்கால வாழ்க்கைக்குப் போதிய வருமானம் பெற்றுவந்தேன்.

கொழும்பு கோட்டையில் ஆங்கிலேயருடைய கம்பெனிகள் இருந்த பகுதியில் கென்னடி என்ற ஒரு ஆங்கிலேயரும் அவருடைய மனைவியும் ஒரு சப்பாத்துக்கடை வைத்து நடத்தினர். அங்கு சீமைச்சப்பாத்துக்கள் மட்டுமே விற்பனைக்கிருந்தன. அவர்கள் உள்ளூர்ச்சப்பாத்துக்களையும், உற்பத்தி செய்விக்க விரும்பிச் சப்பாத்துத் தொழில் நடக்கும் பல இடங்களையும் போய்ப்போய்ப் பார்த்துத் திரிந்தவர்கள் ஒரு

நாள் நான் கடமை ஆற்றிய கடைக்கும் வந்தனர். அங்கு தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்ததையும், அவர்களுக்கு வேலை கொடுத்தும் மேற்பார்வை செய்து கொண்டும் நான் நின்றதைக் கண்ட அந்தத் துரை என்னை நோக்கி என் மாதச் சம்பளத்தைக் கேட்டார். எனக்கு இவ்வளவு பணமும், சாப்பாடும் கிடைக்கிறது என்றேன். உடனே அவர்கள் தாங்கள் தொடங்க எண்ணியுள்ள தொழிலை நடத்த ஒரு மேற்பார்வையாளன் (போர்மன்) தேவை என்றும் நான் அதனை ஏற்றுக்கொண்டால் மூன்று மடங்கு சம்பளமும், சாப்பாடும் தருவதாகக் கூறினர். நான் விரும்பாதபடியால் அவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள்.

என்னுடைய 22ம் வயதளவில் நான் கொழும்பில் மேலே கூறியவண்ணம் இருக்கையில் எங்கள் பாடசாலை கிரமாகி நடந்து கொண்டிருந்தது. மேலும் பாடசாலையை அபி விருத்தி செய்வதற்கு எங்களுடைய ஆட்களிடமும், உத்தி யோகத்திலிருந்த சைவாபிமானிகளிடமும் பொருள் சேகரிப் பதற்காக ஆசாரியார் அவர்கள் கொழும்புக்கு வந்து எங்கள் கடையில் தங்கியிருந்தார். அத்தோடு என்னையும், முதலாளி மாருட் சிலரையும், இரண்டொரு தொழிலாளிகளை சைவ போஷணிகளாகும் வண்ணம் மாற்றிவிட்டார். அடுத்த வருடம் நான் ஊருக்கு வந்தபொழுது, அப்பொழுது தேவ ரையாளிச் சைவ வித்தியாசாலையில் படிப்பித்துக் கொண் டிருந்த உபாத்தியாயர் க. வே. தம்பையாச் சோதிடரி டம் எனது சாதக ஓலைச் சுவடியைக் காட்டினேன். அவர் அதனைப் பார்த்துவிட்டு, தம்பி நீர் இனிக் கொழும்புக்குப் போகவேண்டாம், உமக்கு ஆசிரியராகும் யோகம் இருக் றது, ஆனபடியால் படிப்பது நல்லது என்று சொன்னர். நான் இதை ஆசாரியாரிடம் சொன்னேன். அவர் சிறிது யோசித்துவிட்டுப் படிக்கிறதெங்கே? படிக்கமுடியாது, ஆனல் படிப்பிக்கமுடியும். விரும்பினுற் சொல்லு அதற்குரிய ஒழுங் குகளை எல்லாம் நான் செய்துதருகிறேன் என்றார். அன் றைய கல்விச்சட்டத்தின்படி எவரையும் ஆசியராக நியமிப் பதற்கு முகாமையாளருக்கு உரிமை இருந்தது. அதன்படி என்னை நான் ஓர் உபாத்தியாயராக இடாப்பில் எழுது

வித்துவிட்டு அடுத்த நாள் முதல் இரவிலே கரவெட்டி பண்டிதர் க. மயில்வாகனம் அவர்களிடம் சென்று இலக்கிய இலக்கணங்களைப் படிப்பதற்கு ஒழுங்குசெய்தார். அடுத்த சில தினங்களின்பின் பண்டிதர் அவர்களை ஆசாரியார் சந்தித்தபோது அவர் என்னைப் பற்றி இவருக்கு ஏதோ சொல்லியிருக்கவேண்டும். பள்ளிக்கூடத்தில் என்னைக் கண்டு மூன்றாந் தராதரப் பத்திர பரீக்ஷைக்கு ஆயத்தம் செய்யும் வண்ணம் சொன்னார். பாடத்திட்டத்தின்படி பண்டிதரிடமும், சின்னன் அக்கா என்ற எனது முன்னாள் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியையிடமும் தலைமை ஆசிரியர் மு. செல்லையா அவர்களிடமும் பாடங்களைப் படிக்கலானேன்.

இப்படி உபாத்தியாயராக இருந்து பரீக்ஷைக்கு ஆயத்தம் செய்கையில் நெல்லியடி முன்மாதிரிப் பாடசாலையில் *(Model School)* அரசினரால் ஆசிரியர்களுக்கென்று ஒரு சித்திர வரைதல் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் தமிழ்ப்பாடத் திட்டத்தில் சித்திரம் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அந்த வகுப்புக்கு ஏறக்குறைய 50 ஆசிரியர்வரை வந்திருந்தனர். அவர்களுட் பலர் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். மூன்று நான்கு பேர் மட்டுமே என்னைப் போலத் தராதரப் பத்திரம் இல்லாதவர்கள். வகுப்பை நடத்த ஹாட்லிக்கல்லூரிச் சித்திர ஆசிரியர் திரு. சொலமன் அவர்கள் வந்திருந்தார். மாணவர்களின் முன்னறிவை அறியும்பொருட்டு முதல்நாள் தனக்கு முன்னிருந்த ஒரு மேசையில் சில பொருள்களை வைத்துவிட்டு வரையும் வண்ணம் சொன்னார். எல்லோரும் வரைந்து முடித்தபின் அவர் எழும்பிவந்து எல்லோரும் வரைந்த படங்களை அவரவர் அருகிற்சென்று பார்த்துவிட்டு நான் வரைந்த படத்தை மட்டும் எடுத்துக்கொண்டு போய்க் கரும்பலகையில் எல்லோருக்கும் தெரியும்படி மாட்டிவிட்டு எங்களைப் பார்த்து இதுபோல வரையக்கூடியவர்கள் குறைந்தபட்சம் ஒரு பத்துப் பேராவது உங்களுள் இருந்தால் ஆறுமாத முடிவில் நடக்கவிருக்கும் சித்திரப் பரீக்ஷை

யில் நீங்கள் எல்லோரும் நிச்சயமாக சித்தியடையக்கூடும் என்று சொன்னார். 6 மாதமுடிவில் நடைபெற்ற அரசாங்கப் பரீக்ஷையில் சித்தியடைந்தோர் என்னைவிட இன்னும் நால்வரேயாவர்.

இதன்பின் சில மாதங்கள் கழித்து நடந்த 3-ந் தராதரப் பரீக்ஷைக்குத் தோற்றிய முந்நூற்றுக்கும் அதிகமான ஆசிரியர்களுள் யாழ்ப்பாணம் முழுவதிலுமாகச் சித்தியடைந்தோர் நானும் இன்னும் ஏழெட்டுப் பேருமேயாவோம். 6-ம், 7-ம், 8-ம் வகுப்புக்களை இளமையிலே படித்து முடிக்கவில்லையே என்று எனக்கிருந்த தாழ்வுமனப்பான்மை இந்த இரண்டு பரீக்ஷை முடிவுகளினாலும் நீங்கிவிட்டதுமல்லாமல் அதன்பின் நான் பலதுறைக் கல்வியிலும் துணிந்து இறங்க எனக்குத் தைரியத்தையும், விருப்பத்தையும் தந்தது. இனி 1922-ம் ஆண்டளவில் தோற்றுவிக்கப்பட்ட கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீக்ஷையை வருடந்தோறும் கலாசாலைப் பேராசிரியர் குழுவே நடத்திவந்தது. அக்குழுவினர் ஒவ்வொரு வருடமும் ஒன்று இரண்டு தாழ்த்தப்பட்ட மாணவர்களையும் தெரிவுசெய்து பயிற்சி அளித்து வந்தனர். ஆனால் சமாசன சமபோசனச் சட்டம் அமுலுக்கு வந்தபின்பு இரண்டு மூன்று வருடங்கள் பிரவேசப் பரீக்ஷைக்குத் தோற்றிய எந்தத் தாழ்த்தப்பட்ட மாணவனும் தெரிவுசெய்யப்படவில்லை. இது குறித்து ஆசாரியாராகிய சூரனும், தெல்லிப்பளை யோவேல்போல் என்னும் ''முதற்குரல் எழுப்பிச் சாதி முறியடித்திட்ட வீரனும்'' அரசாங்கத்துக்குச் செய்துகொண்ட விண்ணப்பங்களினால் பிரவேச பரீக்ஷையை நடத்தும் உரிமையை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. அரசாங்கம் பொறுப்பேற்ற 1930-ம் ஆண்டில் நடத்திய முதற் பரீக்ஷையிலேயே கோப்பாய்க்கு நானும் தெல்லிப்பளைக்கு க. முருகேசு ஆசிரியரும் தெரிவு செய்யப்பட்டோம். தெல்லிப்பளையிலே சமபோசன விஷயமாக எதுவித கிளர்ச்சியும் உண்டாகவில்லை. ஆனால் கோப்பாயில் பெருங்கிளர்ச்சி உண்டாயிற்று. அப்பொழுது அங்கே முதலாமாண்டிலும், இரண்டாமாண்டிலுமாக மொத்

தம் 84 மாணவர்கள் இருந்தோம். நான் மட்டுமே தாழ்த் தப்பட்ட சமூகத்தினன். மற்ற 83 மாணவர்களும் சம போசனத்தை ஏற்றுக்கொள்ளாமல் சில தினங்கள் கலா சாலைக்கு வெளியே சென்று இருபாலையிலுள்ள கடைகளிற் சாப்பிட்டு வந்தார்கள். இந்தச் சமயத்தில் என்னைக் கலா சாலையிலிருந்து வெளியேற்றுவதற்கு எத்தனையோ பிரயத் தனங்களை உயர்சாதியினர் எனப்படுவோர் மேற்கொண்ட னர். அவற்றுள் ஒன்று எனக்கு 8000/- ரூபா வழங்குவ தாகவும், அதைக்கொண்டு நான் கலாசாலையை விட்டு வெளியேறி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிற் சென்று படிக்கலாம் என்பதாகும். செல்வாக்குள்ள பெரி யோர்கள் பலர் ஆசாரியாரைச் சந்தித்துப் பேச்சு நடத் தினர். அவர் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை.

இதிலே தோல்வி கண்ட அவர்கள் பின் பலவிதமான பயமுறுத்தல்களைப் பரப்பினர். அப்பொழுது ஆசாரியார் அவர்கள் வித்தியாகர்த்தர் அவர்களை நேரிற் சந்தித்து என் உயிருக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு விண்ணப்பித் துக் கொண்டார். இதனால் கலாசாலை அதிபரும் உபஅதிப ரும் எனக்கு மெய்க்காப்பாளராக இருக்க வேண்டுமென்று வித்தியாகர்த்தரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இரண்டு கிழமை முடிவதற்குமுன் தும்பளையைச் சேர்ந்த சு. சிதம் பரப்பிள்ளை என்ற ஆசிரிய மாணவரின் தலைமையில் ஏழு எட்டு மாணவர்கள் சமபோசனத்திற் கலந்துகொண்டு எனக்கும் பாதுகாப்பாக இருந்து வந்தனர். அடுத்தகிழமை சகல மாணவர்களும் சமபோசனம் செய்யலாயினர்.

தேர்ச்சி பெற்றுத் தொடர்ந்து நடந்த எல்லாத் தவ ணைப் பரீக்ஷைகளிலும் முதல் மாணவனாக நானே இருந்து வந்தேன். கலாசாலை ஆரம்பித்த காலம் முதல் சாதனா பாடசாலைக்குச் சென்று படிப்பித்தல் பயிற்சி பெறுவதற்கு எந்தத் தாழ்த்தப்பட்ட மாணவனும் அனுமதிக்கப்பட வில்லை. அங்கு போய்ப் படிப்பிக்கும் உரிமையும் எனக்கே முதன்முதலில் கிடைத்தது. 1931ம் ஆண்டில் நடந்த ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கப் பிரவேச பரீக்ஷைக்குத்

தோற்றி கலாசாலை மாணவருள்ளும் வெளிமாணவருள்ளும் நானே முதலாவதாகச் சித்திபெற்றேன். இந்த வகுப்பை கலாசாலைப் பண்டிதர் வே. மகாலிங்கசிவம் அவர்களும் சாதனு பாடசாலை ஆசிரியர் பொன் கிருஷ்ணபிள்ளை அவர் களும் நடத்தினுர்கள். கலாசாலையில் முன்மாதிரிப் பாடம் நடத்தும் மாணவர்களுக்குப் படங்களும் பிற உபகரணங்க ளும் பெரும்பாலும் நானேசெய்து கொடுத்து வந்தேன்.

(புலவர் அவர்கள் தமது கைப்பட எழுதிவைத்துள்ள ''என் வரலாறு'')

★ ★ ★

அந்த நாட்களில் பஸ்வண்டிகள் தனியாருக்குச் சொந் தமானவையாகவே இருந்தன. அந்த வண்டிகளின் ஆசனங் களில் அமர்ந்து பிரயாணம் செய்யும் உரிமை தாழ்த்தப் பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்டே வந்தது. சமாசனப் பிரச் சனை மக்கள் மத்தியில் எழுந்தபோது ஆசனத்தின் மேலுள்ள மெத்தையை அகற்றிவிட்டு அதன்மேல் இருந்து பிரயாணம் செய்வதற்கென ஒரு பகுதியை ஒதுக்கிக் கொடுத்தனர், ஒரு தினம் நெல்லியடியிலிருந்து கோப்பாயை நோக்கி தும் பளையைச் சேர்ந்த ஒருவரின் பஸ்வண்டியில் சி. வ. அவர் கள் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார். அந்த வண்டி யிற் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த ஒரு சாதிமான் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சமபோசனப் பிரச் சினையை உருவாக்கியவர் இவர்தானென்று இனங்கண்டு கொண்டதும், இவரை வண்டியிலிருந்து இறக்கிவிட வேண் டுமெனச் சாரதியுடன் வாதாடினுர். சாரதி துணிச்சலும் தைரியமும் மிக்கவர். அந்தச் சாதிமானின் வார்த்தைகளை துச்சமாக நிராகரித்து விட்டதுடன், அடுத்த சந்தர்ப்பத் தில் ஆசனமெத்தையின் மேலிருந்து பிரயாணஞ் செய்யும் உரிமையை வழங்கிவிட்டார்.

சி. வ. அவர்களின் அறிவுத்திறனும், மாணவர்களுக்குக் கல்வி போதிப்பதற்கு வேண்டிய உபகரணங்களைச் செம்மை

யாகச் செய்யும் ஆற்றலும், ஓவியத்திலிருந்த மேம்பாடும் காரணமாகவே ஆரம்பத்தில் அவரை வெறுத்தொதுக்கிய ஆசிரிய மாணவர்கள் அனைவரும் காலகதியில் நட்புடன் நெருங்கிவரலாயினர். தமது கற்பித்தல் தேவைகளுக்கு வேண்டிய உபகரணங்களையும் ஓவியங்களையும் இவர் கைவண்ணத்தின் மூலம் பெற்றுக்கொண்டனர். இந்த நெருக்கம் காரணமாக உயர்ந்த சமூகப்பிள்ளைகள் படிக்கும் சாதனை பாடசாலையிலே தங்களைப்போல பயிற்சி மாணவனுக்குக் கற்பிக்கும் வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்தனர். சி. வ. அவர்கள் தமது அறிவு, ஆற்றல்களின் மூலம் தேடிக்கொண்ட இந்த வாய்ப்பு தாழ்த்தப்பட்ட சமூக ஆசிரியன் உயர்சாதி இந்துப்பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கலாம் என்ற வரலாற்றைத் தோற்றுவிக்கும் சாதனையாக அமைந்தது.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வாழ்க்கையில் இரண்டாம் வருட காலகட்டத்தில் சி. வ. அவர்களுக்குக் கிட்டிய அருட்கொடை ஒன்றை எண்ணி அன்னார் இன்றும் மெய்சிலிர்க்கின்றார்கள். அக்காலத்தில் கலாசாலைப் பண்டிதர் குருகவி வே. மகாலிங்கசிவம் அவர்கள் விடுதி மேற்பார்வையாளர் பொறுப்பினை ஏற்று விடுதியிலே தங்கியிருக்கவேண்டி நேர்ந்தது. அச்சமயம் பண்டிதர் அவர்களுக்குப் பொழுது போகாமையால் கலாசாலை மாணவர்கள் அத்தனை பேருள்ளும் சி. வ. அவர்களையும் தச்சர் குலத்தைச் சேர்ந்த இன்னொரு மாணவனையும் கட்டாயப்படுத்தி சிவஞானசித்தியார் என்ற சைவசித்தாந்த சாஸ்திரத்தை இருவருக்கும் போதித்தார். அந்தப் பெரியாரின் புனிதமான அந்தரங்க நோக்கத்தை அக்காலத்திலே தெளிவாகப் புரிந்துகொள்ளாத சி. வ. அவர்கள் ''அந்த மகானின் அந்தரங்க நோக்கத்தை நான் அப்பொழுது அறியவில்லை. பின்னர் அறிந்து திருவருளை வியந்தேன்'' எனப் பக்திசிரத்தையுடன் இன்று புளகாங்கிதமுறுகின்றார்கள். சி. வ. அவர்களின் உணர்வு எத்துணை நியாயமானது என்பதனைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் அன்றைய யாழ்ப்பாண சமுதாயத்தின் குணம்சத்தை விளங்கிக் கொள்ளல் அவசியமாகிறது. தாழ்த்தப்

பட்ட மகன் ஒருவன் கைகட்டி, வாய்பொத்தி வெளியே நின்று புராணப் படிப்பைக் கேட்கின்றுன் என்ற காரணத் துக்காக, புராணப் படிப்பையே நிறுத்திக்கொண்ட யாழ்ப் பாணச் சமுதாயத்தில், தாழ்த்தப்பட்டவர்கள் கண்பார்க் கத் தகுந்த வண்ணம் உணவு உண்பதே பாவம் என்று ''சைவ விஞவிடை'' எழுதி இன்று தேசிய வீரனெனத் தலேயில் வைத்துக் கொண்டாடப்படும் ஆறுமுகநாவலர் என்ற ''பெருந்தகை'' பிறந்த இந்த மண்ணில் தாழ்த்தப் பட்ட சமூகத்து ஆசிரிய மாணவன் ஒருவனுக்குச் சைவசித் தாந்த சாஸ்திரத்தைப் பிரத்தியேகமாக அக்கறையுடன் குருகவி அவர்கள் அன்று போதித்தார் என்பதே சி. வ, அவர்களின் பத்திசிரத்தையான உணர்வுக்குரிய நியாய மென்பதனே இன்றைய இளேயதலேமுறையினர் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

சி. வ. அவர்கள் 1930-ம் ஆண்டு ஆசிரிய பயிற்சிக் கலாசாலேக்குச் செல்வதற்கு முன்னர் மாமஞர் கரவெட்டி வ. சி. சிலம்பு வைத்தியர் அவர்களின் மூத்தபுதல்வி பரா சக்தியை திருமணம் செய்து கொண்டார்கள். ஐந்தரை வருட இல்வாழ்க்கையில் ஒரு பெண்குழந்தையை அளித்து விட்டு மனேவி பராசக்தி அவர்கள் காலமாஞர்கள். அதன் பின்னர் 1938-ம் ஆண்டு வதிரி க. கந்தையா அவர்களின் மூத்தபுதல்வி மீஞட்சியம்மாவை மறுமணம் செய்துகொண் டார்கள்.

ஆசிரிய பயிற்சியை முடித்துக்கொண்டு மீண்டும் தேவ ரையாளி சைவவித்தியாசாலேயில் 1932-ம் ஆண்டு ஆசிரிய ராகப் பதவியேற்றுப் பணியாற்றிக் கொண்டிருந்த காலத் தில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளே அவர்கள் திருநெல் வேலியில் நடத்திவந்த காவிய வகுப்பிற் படித்துப் பால பண்டிதர் பரீட்சையிலும் முதலாவதாகச் சித்தியெய்திஞர் கள். அதன்பிறகு தேவரையாளி சைவவித்தியாசாலேயிற் தலேமை ஆசிரியராக இருந்த கவிஞர் மு. செல்லேயா அவர் களுடன் இணேந்து வித்துவான் ந. சுப்பையாபிள்ளே அவர் கள் யாழ். இந்துக்கல்லூரியில் நடத்திய வித்துவான் வகுப் பிற் சேர்ந்து படித்தார்கள். ''மறுமலர்ச்சிக்கால எழுத்

தாளரான'' கோப்பாய் பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா அவர்களிடம் சமஸ்கிருதத்தையும், பண்டிதமணி அவர்களிடமும் மதுரைப் பண்டித பரீட்சைக்குரிய பாடங்களையும் ஒழுங்காகப் படித்து வந்தார்கள். அதன்பிறகு பொலிகண்டி கந்தவன ஆலய முகாமையாளர் திக்கம் செல்லையாபிள்ளை அவர்களிடம் கல்விகற்று சென்னை சைவசித்தாந்த சமாஜம் நடத்திவந்த இளஞ் சைவப்புலவர் பரீட்சையிலும், சைவப்புலவர் பரீட்சையிலும் சித்தியடைந்த முதல்வர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டார்கள். சி. வ. அவர்களின் இச்சாதனை தாழ்த்தப்பட்ட சமூகத்துக்குக் கிடைத்த ஒரு சமூக வெற்றியாகவே அமைந்தது. சைவப் பெரியார் சூரன் வழிவந்த சமயநெறியானது சடங்குமுறையாலும், வழிபாட்டு முறையாலும், ஆசார முறையாலும் தேவரையாளிச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் மத்தியிற் செறிந்து உயர்சமூகத்துச் சைவர்கள் இடையே அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டது. ஆனல் புலமைநெறி சார்ந்த சமய அறிவுக்கான அங்கீகாரமும் தகுதிப்பாடும் சி. வ. அவர்களின் சைவப்புலவர் பட்டம் மூலமே இச் சமூகத்துக்கு வந்து சேர்ந்தன எனலாம். இதனை உறுதிப் படுத்துவ்தாகவே பொலிகண்டி கந்தவன ஆலய வழிபாட்டுத் தொடர்பினுல் சி. வ. அவர்களை அறிந்து வைத்திருந்த நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர் 1940-ல் வாழ்த்துப்பா ஒன்றினை சி. வ. அவர்களுக்கு அனுப்பிவைத்தார்.

சி. வ. அவர்கள் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு முன்னர் மூன்று ஆண்டுகளும், பயிற்சியின் பின்னர் முப்பத்து மூன்று ஆண்டுகளுமாக இன்றைய தேவரையாளி இந்துக் கல்லூரியில் பணிபுரிந்து வந்திருக்கிறுர்கள் அக்காலத்தில் இலக்கியம், மொழி, சைவசமயம், கணிதம், சித்திரம் ஆகிய பாடங்களைச் சிறப்பாகக் கற்பித்து வந்ததன் காரணமாக அரசினர் பொதுப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் குறிப்பிட்ட இப்பாடங்களிலே விசேட சித்தியைப் பெற்று வந்திருக்கின்றனர். சைவப்புலவர் சி. வ. அவர்கள் தமது ஆசிரியப் பணியிலிருந்து 1965-ல் இளைப்பாறிய சமயத்தில் கல்லூரி அதிபராக இருந்த திரு. எம். எஸ்.

சினித்தம்பி அவர்கள் முன்னின்று நடத்திய மாபெரும் பாராட்டுவிழா மூலமும் பல அன்பளிப்புகள் மூலமும் கௌரவிக்கப் பெற்ருர்கள்.

இப்போது தேவரையாளி இந்துக்கல்லூரியின் அதிபராக இருக்கும் திரு. ஆ. இரத்தினசபாபதி அவர்கள் சைவப்புலவர் சி. வ. அவர்களின முதற்தாரத்து மகள் திலகவதி அவர்களின் கணவராவார். இரண்டாவது தாரத்தின் மூத்தமகனும் அவரது மனைவியும் கணக்காளர்களாக I. C. M. A (லண்டன்) இப்பொழுது இங்கிலாந்தில் உத்தியோகம் பார்த்து வருகிருர்கள்.

சி. வ. அவர்களின் கல்விப்பணியானது அன்ஞர் கற்பித்துக் கொண்டிருந்த கல்லூரியோடு மாத்திரம் உள்ளடங்கி நின்றுவிடவில்லை. இலக்கண மேதை பண்டிதர் க. வீரகத்தி அவர்கள் கரவெட்டியில் வாணிகலைக்கழகம் என்னும் கல்விக்கூடத்தை நிறுவி பண்டிதர், சைவப்புலவர் பரீட்சைகளுக்கான வகுப்புக்களை நடத்தியபோது அவ்வகுப்புகளிற் கல்வி போதித்த ஆசிரியப் பெருமக்களுள் சி. வ. அவர்களும் ஒருவர். சிங்களம் அரசகருமமொழி ஆக்கப்பட்டதால் அம்மொழியைக் கற்றுத்தேற வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சிங்களம் கற்பிக்கும் பணியையும் செய்து வந்துள்ளார்கள். இப்பணியைப் பாராட்டி சி. வ. அவர்களின் குருநாகல் பாடசாலை சகபாடியும், முன்ஞள் நிதிமந்திரியுமான அமரர் வன்னிநாயக்க அவர்கள் பாராட்டுக் கடிதமொன்றை அனுப்பியபோதும், அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் நேரில்வந்து விடுத்த வேண்டுகோளுக்கிணங்க சிங்களம் போதிப்பதைக் கைவிட்டார்கள்.

1956-ம் ஆண்டு அகில இலங்கைத் தமிழர் மகாசபை முன்னின்று நடத்திய ஆலயப் பிரவேசங்களில் சி. வ. அவர்களும் முக்கிய பங்கேற்றுச் செயற்பட்டார்கள். குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அன்ஞரால் ஆக்கப்பெற்ற பாடல்கள் பலரது பாராட்டுக்களையும் பெற்றன. பேராதனைப் பல்கலைக்கழக இந்துமாமன்றத்திலும், ஆசிரியர் கலாசாலைகளிலும், சைவ ஆலயங்களிலும் சமயச்சொற்பொழிவுகள் ஆற்றிவந்

திருக்கும் சைவப்புலவர் அவர்கள் இன்று எண்பதாவது வயதினை அடைந்து விட்டார்கள்.

இன்று அமைதியாகத் தமது இல்லத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் சைவப்புலவர் அவர்கள் தாம் கற்ற சோதி டக்கலையினால் மக்களுக்குப் பணிபுரிவதும், தமது சமூகத்தவ ரின் ஆலயங்களுக்குத் தோத்திரப் பதிகங்கள், திருவூஞ்சல் பாடிக் கொடுப்பதும், இடையிடையே சைவசித்தாந்த வகுப் பினை நடத்துவதும், ஐயப்பாட்டுடன் வருவோர்க்கு சந்தேக நிவர்த்தி செய்வதும், தமது வழிபடு தெய்வமான பூவற் கரைப் பிள்ளையார் ஆலய தரிசனத்தில் ஈடுபட்டுத் திளைப் பதுமாகப் பொழுதைப் பயனுறக் கழிக்கின்றார்கள். இப்பய னுறு பொழுது இன்னும் பல்லாண்டுகள் ஒளிவீசிப் பிர காசிக்க வேண்டுவோமாக,!!

*(புலவர் அவர்கள் சொல்லக்கேட்டு, புலவர் அவர்களின் ''பவளவிழா'' மலரில் (1986) அன்னாரின் மாணவன் தெணியான் அவர்கள் எழுதிய வரலாறு)*

★ ★ ★

1986 ஜுன் 22ம் நாள் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் யார் ஆலயத்தில், அவ்வாலய பரிபாலன சபையார் புலவர் சி. வ. அவர்களுக்குச் சிறப்பான பவளவிழா ஒன்றினை எடுத்தனர். அந்த விழாவில் ஊரும் புலவர் அவர்களின் மாணவ குழாமும் ஒருங்குகூடி அன்னாரைத் கௌரவித்து மகிழ்வித்தனர். புலவர் அவர்களுக்கு 'கலாஜோதி' என்னும் பட்டத்தினைச் சூடித் தாம் மகிழ்ந்ததோடமையாது, பவள விழா' மலரொன்றினையும் வெளியிட்டு வைத்து, பரிபாலன சபையார் பெருமையுற்றனர்.

புலவர் சி. வ. அவர்களின் இளைய மைந்தர்களுளொரு வரும், மகள் வழிப் பேரனொருவரும் இன்று ஆசிரியர்களாகி அன்னார் வழிவந்த பணியினைத் தொடர்ந்து கொண்டிருக் கின்றார்கள். மகள் வழிவந்த பேரர்களுள் மூத்தவர் இன்று கொழும்பிலே உத்தியோகக் கடமையாற்றுகின்றார். மைந்த ரொருவரும் பேரப்பிள்ளைகள் இருவரும் தமது உயர் கல்வி யைத் தொடர்வதுடன், இங்கிலாந்தில் வாழ்ந்துவரும் மூத்த புதல்வரின் மகள் அங்கே கல்வி கற்றுக் கொண்டிருக்கின் றார். மகளின் மூத்த புதல்வி அநுசூயா யாழ்நகரில் வாழும்

க. ரஞ்சன் பி. ஏ. (உதவிப் பணிப்பாளர்) அவர்களைத் தமது வாழ்க்கைத் துணையாகக் கொண்டு அண்மையில் இல்லற வாழ்வில் இணைந்துள்ளார்.

புலவர் சி. வ. அவர்கள் தமது இல்லத்துக்கருகே எழுந்தருளியிருக்கும் பூவற்கரைப் பிள்ளையாரை நித்தமும் கை தொழுவதே தமது வாழ்வின் பெரும் பேறெனக் கொண்டு வாழ்ந்து வந்தார். அவ்வாலயத்திற் புதிதாக நிருமாணிக்கப் பட்டிருக்கும் முருகப்பெருமானுக்கு அன்று (29-01-90) குடமுழுக்காட்டும் ஆரம்பதினம் நாள் தோறும் ஏகாங்கியாகப் பூவற்கரையான் திருக்கோயில் புக்கு வழிபட்டு வரும் புலவர் சி. வ. அவர்கள், குடமுழுக்கினைக் கண்குளிரக் கண்டு ஆன்ம அழுக்கை முற்றுறக் கழுவும் நோக்குடன் போலும் தமது மனைவியார் மீனாட்சியம்மையையும் விரைந்து புறப்பட்டு வருமாறு கூறி, உடன் அழைத்துக் கொண்டு ஆலய தரிசனஞ் செய்யச் சென்றார். செல்லும் பொழுதே, 'பத்து நிமிடத்தில் திரும்பி வந்துவிட வேண்டும்' எனக் கூறிக் கொண்டு சென்றவர்.

பூவற்கரையான் சந்நிதானம் அடைந்து ஞானசம்பந்தப் பெருமானின் 'கோளறு பதிகம்' பாடி விநாயகனைத் துதித்து திருமுருகன் குடமுழுக்கும் கண்டு உளம் குளிர்ந்து விரைந்து வீடு திரும்பி, தமது கட்டிலில் மெல்லச் சாய்ந்தார்கள்.

புலவர் அவர்கள் தமது 'வீடு' புகுந்து ஐந்து நிமிடங்கள் கழிந்திருக்கும்......

மனைவியார் வந்து நோக்கிய போது......

''உறங்குவது போலும் சாக்காடு'' என

மாணவ பரம்பரையினருக்குப் போதித்து வந்த புலவர் அவர்கள், தமது எண்பத்தைந்தாவது வயதில் 'அந்தச் சுகத்தினை' அநுபவித்து பூவற்கரையான் பாதபங்கயங்களிற் சங்கமமானார்கள்.

— தெணியான்

# கவிதைகள்

# பொங்கு பூவற்கரை விநாயக மூர்த்தியே!

ஓங்கார ரூபம் உடையான் உள்ளத்தொளியாய்
நீங்கா துறையும் நிகரில்லான் — ரீங்காரம்
வண்டிசைக்கும் சோலை வதிரிபூ வற்கரையெம்
பண்டிதனை நெஞ்சே பதி.

திங்கள் சூடும் அரனருள் மைந்தனே
தேவர் போற்றும் திருமால் மருகனே
துங்க வெங்கரி போலும் முகத்தனே
தொல்லை இன்றி வருந்துயர் மாற்றுவாய்
சங்கு தாரகை கின்னர
சப்தநாத சுரங்கள் ஒலிக்கவே
பொங்கு பூவற் கரைதனில் வாழ்கின்ற
புதுமை உள்ள விநாயக மூர்த்தியே.

ஆறுமுகன் அண்ணு அருளம்மை முன்புதல்வா
கூறுமடி யார்கள் குறைபோக்கிப் – பேறுபல
வாரி வழங்க வதிரிபூ வற்கரையைச்
சேரிடமாய்க் கொண்டாய் தெரிந்து.

தேங்காய் அடிப்பார் செழுமலரிட் டேதுதிப்பா
ஆங்கார ஆணவத்தை அவ்விடத்தே – நீங்கவிட்டுச்
சுற்றி வலம்வருவார் சுந்தரப்பூ வற்கரையைப்
பற்றிவாழ் பக்தரெலாம் பார்த்து.

காலையிலும் மாலையிலும் கைகூப்பி யேகந்தன்
வேலை வணங்குவதே வேலையென – மேலைநாள்
ஓதும் புலவர் உரைப்படிபூ வற்கரையிற்
சூதுதவிர் வேலைத் துதி.

சித்தியொடு முத்திதரும் செல்வக் கணபதியே
அத்திமுகா பூவற் கரையுறையும் - வித்தகனே
எப்போதும் முட்டின்றி எல்லாமிங் கேநிகழ
ஒப்பிலருட் பார்வை உதவு.

கல்லாலின் கீழமர்ந்து கற்றதவ மூத்தோர்க்குச்
சொல்லால் உணர்த்தரிய தொன்மறையின் - பல்பொருளும்
சின்முத் திரையால் தெளிவு பெறச்செய்த
தென்முகனை வாழ்த்து தினம்.

வள்ளிதெய்வ யானை வலமுமிட முமமர்ந்து
கொள்வர் கமலம் குமுதமலர் - வள்ளுகரம்
கந்தன் வலக்கண் கதிரே; மதியிடக்கண்
வந்தனைசெய் வார்மலர்வார் வாழ்வு.

இறைவனுக்குச் செய்யும் நிவேதனம் எல்லாம்
குறைவறவே சண்டே சுரர்க்கும் - மறைசொன்ன
சீர்சேர் தியானம் கலையச்செய் தேவணங்கி
பார்மீது வாழுதல்நற் பண்பு.

சங்கநூல் மெய்கண்ட சாஸ்திரங்கள் காவியங்கள்
அங்கநூல் சைவமுறை ஆறிரண்டு - துங்கமுறக்
கற்கஅருள் செய்தனைபூ வற்கரையெம் காவலனே
நிற்கஅருள் செய்வாய் நிலைத்து.

ஓவியங்கள் சிற்பங்கள் உள்ள இடந்தோறும்
பாவினங்கள் தேன்சொட்டப் பாடியவர் - காவியந்தேர்
சைவப்புலவர் தமிழ்க்கவிஞர் வல்லிபுரம்
தெய்வத் துணையுடனே சேர்ந்து.

சூரியனே வெள்ளிபுதன் தூயவியா ழன்கேது
சாரிவரும் சனிராகு செவ்வாய்சந் திரனுகிப்
பாரில்வரும் நவக்கிரகம் பணிவார்பூ வற்கரையிற்
சீரியராய் வாழ்வோங்கிச் செல்வமெலாம் எய்துவரே.

மாதா சிவசக்தி வல்வினைகள் நீக்கிஎமக்(கு)
ஆதார மாகி அருள்புரிவாய் - வேதாவும்
வந்து வணங்கும் வதிரிபூ வற்கரைவாழ்
சுந்தரியே நீயெம் துணை.

வானமதை அளந்தமணிக் கோபுரத்தைக் குதிரை
வாகனத்தைக் காணிகளை ஆச னத்தைத்
தேனமரும் பூங்காவைத் திகழுந் தெய்வத்
திருவுருவம் ஒருமூன்றை மதிலைஒங் கார
ஈனமிலாத் திருவாசி தம்மை வேலை
இலங்குபல தீபத்தை நகையை வேறு
தானமளித் துள்ளோர்கள் வாழி வாழி
சகலருமே பல்லாண்டு வாழி வாழி.

எம்பிரான் கோயில் நண்ணி இன்னிசைப் பாடல்பாடி
நம்புவார் தம்மை நாகம் நலிவுறத்தீண்டா; தோஷம்
அப் புவி தனிலே நீங்கும் அணிபூவற் கரையெம் நாக
தம்பிரான் பாதம் போற்றும் சகலரும் நீடுவாழ்வார்.

பூவற் கரைகாவல் பூண்ட வயிரவரே
யாலற் றினையும் எளிதாக - மேவுற்று
நல்வாழ்வு வாழ நமக்கருளை ஈந்துவிடை
சொல்லியருள் நீயே துணை.

ஆதியிலே இங்குறைந்த ஐயப்ப சாமியே
சோதியாய் நின்று துணைபுரிந்து - மேதினியோர்
மெச்சுபெருங் கோயிலிங்கு மேலோங்கச் செய்தனையே
சித்தமிசை நிற்பாய் சிறந்து.

கயிலாய மலைவந்த நாரதர் தூயமாங்
கனியொன்றை அரனுக் கீயப்
பயில்வாய்மை திகழுமந் தப்பழம் பெற்றிடப்
பந்தயம் என்ன நொடியில்
மயிலேறி முருகனிவ் வகிலமுற்றுஞ் சுற்றி
மகிழ்வுடன் பறந்து வருமுன்
ஓயிலாகத் தந்தை வலத்தாற் கனியைக் கைக்கொண்ட
ஓங்கார ரூபா போற்றி.

# ஆனைமுகன் பாங்கரிலே தெள்ளு தமிழ் முருகன்

அள்ளி அருள்வழங்கும் ஆனைமுகன் பாங்கரிலே
தெள்ளு தமிழ்முருகா சேர்ந்துநின்று – விள்ளுபுகழ்
ஓங்கும்பூ வற்கரையை உன்னு பவரையெலாம்
தாங்குவீர் வேண்டுவன தந்து.

வேறுபல நாடுசென்று மீண்டார் உதவுநிதி
வீறுடனே கொண்டு மிளிர்கோயில் – ஆறுபடை
வீடுடையாய் பூவற் கரையமர்ந்த வேல்முருகா
பீடுபெற ஆள்வாய் பெரிது.

கந்தசட்டி நல்விழாக் கார்த்திகைத் தீபவிழா
அந்தம் பொருந்தைப் பசிவெள்ளி – முந்தைமுறை
காண்போம்பூ வற்கரையிற் காலம் முழுவதுமே
மாண்போ டிருந்து மகிழ்ந்து.

கந்தரலங் காரமநு பூதி கலிவெண்பா
சந்தத் திருப்புகழே சார்முருகு – கந்த
புராணம்பூ வற்கரையில் ஓத முருகப்
பிரான்நீ அருள்மாரி பெய்.

அற்புதமார் தூபியிதை ஆக்குபெரு மைக்குரியர்
சிற்பிசிவ சம்புவெனத் தேர்.

முருகன் குடமுழுக்குச் சேர்செலவு முற்றும்
ஒருவர்தா ஞகவே செய்த - பெருந்தியாகி
துய்யசுப்ர மண்யமாம் சூதற்ற மானேச்சர்
உய்ய வழி கண்டார் **உ**வந்து.

இன்றுவரை வேலாய் இருந்த முருகனுக்குத்
துன்று திருவுருவம் தோற்றுவித்து - நன்றுசெய
நீர்சுத்தி நெல்சுத்தி எல்லாம் நிகழ்வித்தார்
தார்மார்பன் வேலாயு தம்.

வேண்டுமிரு பத்தேநான் காயிரம் வெண்பொன்ஞல்
தூண்கள் பதிஞறும் தோற்றுவித்த - மாண்புப்
பதிஞறு பேர்க்கும் பதிஞறு பேறும்
பதிமுருகன் ஈந்தருளும் பார்த்து.

---

*''சைவப்புலவர் தமிழ்க்கவிஞர் வல்லிபுரம் தெய்வத்துணை யுடனே சேர்ந்து'' கொள்வதற்கு முன்னர் இறுதியாக யாத்த கவிதை இது.*

# குன்றக்குடிக் குமரன்

சம்பந்தர் மெய்கண்டார் தம்பிரான் தோழரைப்போல்
வெம்பந்தம் தீர்ந்திளமை மேவியே - நம்பன்
அடியிற் பொடிபடிய அண்டிஞன் குன்றக்
குடியிற் குருவடிவங் கொண்டு.

குன்றக் குடிக்குமரன் கோலமயில் வேல்துறந்து
வென்றிமிகு சற்குருவாம் வேடத்தில் - இன்றெம்
எதிரில் எழுந்தருள என்னதவம் செய்தோம்
வதிரீப் பதிதனிலே வந்து.

---

★ குன்றக்குடி அடிகளார் வதிரிக்கு எழுந்தருளிய போது பாடியது.

# காவல வருக!

அறுசீர் விருத்தம்

சேவலும் மயிலும் விட்டுத்
திருக்கர வேலும் விட்டுக்
காவலர் கடம்பும் விட்டுக்
கண்களீ ராறும் விட்டுப்
பாவலர்க் கருளுந் தெய்வப்
பைந்தமிழ் தனைவி டாது
மாவலி கங்கை பாங்கர்
மன்னிய தபோவ னத்தே.

வந்தெழுந் தருளி ஈழ
மக்களைத் தடுத்தாட் கொள்ளச்
சந்தமார் தனது நாமச்
''சரவண பவஓம்'' என்ற
மந்திர மதனை நாளும்
மயர்வற ஓது விக்கும்
கந்தவேள் வருக! தெய்வக்
காவல வருக! நன்றே!

கண்டதே காட்சி யாகக்
காலத்தைப் போக்கும் ஈழ
மண்டல மாந்த ரெல்லாம்
மம்மர்விட் டியோக மார்க்கத்
தொண்டராய் மிளிர வேண்டி
அவர்தமைத் தூய்மை செய்யக்
கொண்டதோ இறையுன் போர்வை?
குருவுரு வருக! இன்றே!

பூசுநீ றதனைப் போலப்
புனிதமாய் உளம்வி ளங்கிற்
தேசுறத் தேகம் நல்ல
திடத்துடன் நிலைத்து வாழ
ஆசுறு யோக மார்க்கர்
ஆசனங் களைப்ப யிற்றி
மாசுதீர்த் தெமையாள் யோக
மகராஜ்நீ வருக மன்னே!

வருகநீ வருக வென்று
வான்முக டெல்லை எட்டப்
பெருமிதத் தோடு கூறிப்
பிரியமாய் வரவேற் கின்றோம்;
அருநிதி அருளுஞ் சச்சி
தானந்த யோகி யான
குருபரா, வருக! எங்கள்
குறையெலாம் குன்றும் இன்றே.

# சிந்தித்து எழுமின்!

சாதிச் சழக்குச் சமயப்பொய்ப் பூசலிவை
ஆதித் தமிழனறி யான்.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனு''மென்(று)
அன்றே தமிழனறிந் தான்.

''பிறப்பொக்கும்'' என்னஅதிற் பேதம் விளைத்தார்
மறத்தைமதி யாதினியிம் மண்.

வெறும்பிறவி ஆவியினும் மேலென்று கொண்டார்
குறும்பையினிக் கொள்ளா துலகு.

உழைப்பவரைத் தாழ்த்தி ஒடுக்கியும் வந்தார்
தழைக்கவழி இல்லையினித் தாம்.

பிறர்க்குழைத்து மெய்வாடப் பெற்றார் கிளர்ச்சி
மறக்கவழி இல்லை மதி.

சங்கங்கள் கூடிச் சலியா துழைத்திடுமின்
பங்கமுறு வெற்றி பயன்.

உறங்கி இழந்தோம் உரிமை விழிப்பால்
சிறந்த பலம்பெறுவோம் தேர்.

ஒல்லும் வகையெல்லாம் உற்றபணி செய்திடவே
எல்லீரும் வாரீர் எழுந்து.

தூதன்சொல் கேட்டிடுவாய் தோழா விழித்தெழுவாய்
யாதன்பா லுங்கலங்கா தின்று.

(தூதன் 1-12-1946)

# குரு வாழ்க!

*நெல்லியடிச் சைவவித்தியாசாலையும் நிகரில்*
*சைவப் போதகரும்*

நெல்லியடிமுன் நிலவியசை வப்பள்ளி
பல்கலைக ளும்பயிற்று பண்டிதராய் – எல்லை
மருவா தொளிர்ந்த மயில்வா கனமாம்
குருவாழ்க பொற்கிழிகைக் கொண்டு.

*ஆசிரியப் பெருந்தகையின் அருளுள்ளப் பிரதிபலிப்பு*

சூரன் தொடக்கிவளர் தூயகலைக் கோயிலுக்கு
வீரத் தமிழ்வளர்க்கும் மெய்த்தொண்டர் – ஓரிருவர்த்
தந்த பெருமிதத்தைத் தாங்குமயில் வாகனமாம்
எந்தைபிரான் வாழ்க இனிது.

*அரும்பேராசானின் பெரும்பேராசான்மார்*

சேதுபதி தருபட்டம் பரிசி லாதிச்
சிறப்புற்ற சிவசம்புப் புலவர் பாலும்
மாதுயர்தீர் கலைஞானி புலோலி வாழ்வேல்
மயிலாசான் பாலும்பன் னூலை ஆய்ந்தே
ஒதுதவம் பெற்றுயர்ந்த கரவை வாசர்
ஒப்புயர்வில் பண்டிதரென் றுலகம் போற்றும்
கோதுதவிர் மயில்வாக னப்பேர் மேவெம்
குருநாதர் திருவடிகள் முடிமேற் கொண்டோம்.

*தீந்தமிழீந்த தீர்க்காயுள்*

உன்னால் இருந்தேன் உயர்தமிழே என்றுமுனஞ்
சொன்னார் மொழிவழியே தொல்லுலகில் – மன்னிப்
பிறையாயி ரங்கண்ட பேராசான் எங்கள்
குறைபோக்கி ஆண்ட குரு.

*பொற்கிழி வழங்கிய புரவலரைப் போற்றியது*

வாரியெனக் கற்கவரு மாணவர்க்கு நூற்பொருளை
மாரிபோ லேவழங்கி வாழ்ந்தவர்க்குப் – பாரியைப்போல்
பொற்கிழியை ஈந்த புரவலர்கள் பூவுலகில்
நற்சுகமே வாழ்க நயந்து.

# காந்தியின் சாதனை

கும்மி

புத்தரும் சித்தரும் பத்தரும் தீண்டாமை
போக்கிடப் போதித்தா ராயினுமென்
உத்தமன் காந்திசெய் சாதனை யேகோயில்
உட்பிர வேசத்தை ஆக்கியது.

சாதிப்பேய் தாண்டவம் ஆடிடும் கோயிலில்
சங்கர ருமிறை சாந்நித்தியச்
சோதி யிராதெனப் போதல் நிறுத்திய
தோன்றலைப் பாடுங்கள் தோழியரே.

சேரியி லேசென்று செய்திடுந் தொண்டுகள்
தெய்வம் விரும்பு திருப்பணியென்(று)
ஆரிய பூமி அடங்கப் பரப்பிய
அண்ணலைப் பாடுங்கள் தோழியரே.

தில்லைச் சிதம்பரக் கோயில் ஹரிஜனர்
சென்று வணங்கத் திறந்துவிட்டார்
இல்லை இனித்திற வாக்கோயில் காந்திஜீ
இன்று தவஞ்செய்யும் நாட்டினிலே.

வேதத்தோ டாகமம் காட்டிப் புரட்டியே
மிக்க விரோதம் எனச்சொல்லிய
பாதக வைதீகப் பார்ப்பனர் மாயங்கள்
பாரினை விட்டுப் பறந்தனவே.

(தூதன் 19-7-1947)

# தமிழ் பேசும் ஓரினத்தார் தாய்

எண்சீர் விருத்தம்

தெள்ளுதமிழ்ச் சிறுபாவால் உலகோ ரெல்லாம்
செப்பறத்தை மெய்ப்பொருளைத் தேடின் பத்தை
உள்ளுதொறும் உவப்போங்க உணர்த்திக் காட்டும்
ஒப்பரிய பொதுமறையாம் குறளை நெஞ்சை
அள்ளுமொழி திகழ்நூலை அகிலம் உய்ய
அருளியசெந் தமிழ்மகனை அண்ண லான
வள்ளுவனை எமக்களித்த தமிழ்த்தாய் செய்ய
மலரடிகள் தலைவாழ்த்தி வணங்கு வோமே.

வய்யமெலாம் வாழவழி வகுத்துமறை தந்த
வள்ளுவனை முன்னீன்ற மாதா நீயே
சய்வரொடு கிறீஸ்துவர்முஸ் லீம்க ளான
தமிழ்பேசும் ஓரினத்தார் தாயும் நீயே
வெய்யமதப் பிணக்கற்றுத் தமிழ்த்தாயே நாம்
மிக்கபிணிப் புற்றின்று வெற்றி காட்டுன்
துய்யதிரு வடிகளையெம் சென்னி தாழ்த்துத்
தொழுகின்றோம் சோதரர்க்குத் துணைநிற் பாயே.

# சொல்லு தூது

சொல்லுதூது சொல்லுசாதித்
தொல்லையினி இல்லையென்று
சொல்லு தூது.

பன்னுதூது பன்னுசாதிப்
பாகுபாடு சாகுதென்று
பன்னு தூது.

கூறுதூது கூறுசாதிக்
கோயில்திற வாயிலென்று
கூறு தூது.

செப்புதூது செப்புசாதித்
தீங்கியாவும் நீங்கியதாய்ச்
செப்பு தூது.

ஓதுதூது ஓதுசாதி
உயர்வுதாழ்விங் கோய்ந்ததென்று
ஓது தூது.

பேசுதூது பேசுசாதி
பேதமினிச் சேதமென்று
பேசு தூது.

இயம்புதூது இயம்புசாதி
இந்தியாகை விட்டதென்று
இயம்பு தூது.

கழறுதூது கழறுதூது
காந்திமகான் சாந்திஎன்று
கழறு தூது.

(தூதன் 20-3-1947)

# தன்மானத் தமிழன்

நஞ்சுமிழும் சிங்களத்தேள் நண்டெனக்கொண் டேநாங்கள்
விஞ்சுபசிக் குண்டால் விஷமேறித் – துஞ்சிடுவோம்
பனைத்தமிழும் பறிகொடுப்போம் ''பஸ்'' முகப்பில்
நண்டெழுத்து வேண்டாம் நமக்கு.

வீறிட் டெழுதமிழா! வெற்றியடையும் வரைக்கும்
ஆறியிரா தேயெதிர்ப்பை ஆற்றியிரு – கூறிதனைப்
பண்டா அரசாங்கம் ''பஸ்''முகப்பி லேதிணித்த
நண்டெழுத்து வேண்டாம் நமக்கு.

சாகையிலும் தன்மானம் சாயவிடா மெய்த்தமிழின்
ஓகையுடன் காத்துயிரை ஊட்டுவனே – வாகைமலர்த்
தார்பூசிக் குந்தமிழா, சட்டிபிடி மொட்டையர்கள்
தார்பூசிற் சாமோ தமிழ்.

# காந்தீயம்

சத்திய மேயுயர் நித்திய வஸ்துவென்
றித்தரை மீதினிலே
எத்திறத் தோர்களும் மெச்சிப் பணிந்திட
வைத்தது காந்தீயம்

சாதி மதமொழிச் சண்டைகள் நீங்கியே
வேதியர் ஆதியரும்
நீதி திகழ்அஹிம் சாநெறி மேற்கொள
நின்றது காந்தீயம்.

நீர்வை வருகரு ணைக்கழ கம்மெனும்
நீள்கடல் நின்றுதித்தாய்
பார்வை யளித்தியாழ்ப் பாணரைக் காத்திடு
பத்திரி கைப்பரிதி.

வாய்மதக் காந்தீய வாதியர் மல்கியே
வாழ்வட மாகாணம்
காய்தல் உவத்தல் தவிர்ந்தினி யாகுதல்
கைக்கொள வேண்டுமுனே.

(காந்தீயம் 21-5-1948)

# வாழ்கவி!

வெண்பா

வண்டுவிடு தூதெழுதி வானொலியார் பொற்பதக்கம்
எண்டிசையும் போற்ற இனிதேற்றுக் — கொண்டணைந்த
அல்வாயூர்ச் செல்லையா ஆசிரிய ரேயின்னும்
பல்லாண்டு வாழுகவிப் பார்.

தூதனுப்பு வண்டு சுடரிழையார் கூந்தலிலே
தாதளவப் பூக்கள் தமைநாடிப் — போதலுமே
ஐம்பாலிக் காலம் அறுபதுபால் ஆகியுள்ள
சம்பவமுன் பாட்டில் தலை.

தூயதமி ழிற்சிரிப்புச் சொல்தோறும் சொட்டிடவே
மாய முறுகவிதை மாரிபொழி — காயமுகில்
செல்லையா வின்கவிதை சேர்ந்து படித்துணர்ந்து
நல்லையா ஆவோமே நாம்.

பாட்டுக்குப் பொன்சொரிந்தார் பண்டைமர பாலரசர்
கேட்டு மகிழ்ந்து கிளர்ந்தெழுந்து — வாட்டமெலாம்
தீர்ந்தார் பொதுமக்கள் செல்லையா சொல்கவிதை
தேர்ந்தாரும் வாழ்க சிறந்து.

---

★ *புலவர் அவர்களின் நண்பர் அல்வாயூர், கவிஞர் திரு. மு. செல்லையா அவர்கள் இலங்கை வானொலி நிலையத்தார் நடத்திய கவிதைப்போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றபோது பாடியது.*

# மொழிப் பெருமை

எம்மொழி பேசு வோர்க்கும் இன்னுயிர் அவர்வ ழங்கும்
தம்மொழி யாகும் அந்தத் தாய்மொழி ஐயம் இல்லை
அம்மொழி தனையன் னுர்கள் ஆதியில் ஆக்கி னலும்
செம்மொழி ஆவ தற்குச் சென்றிருக் கும்பல் லாண்டு.

அன்று அவர் ஆக்கி நாளும் அன்புடன் வளர்த்து வந்த
பொன்றறில் மொழியே காலப் போக்கினில் தனைப்ப டைத்த
குன்றலில் மனித வர்க்கம் குணத்தினி லுயர்ந்து வாழ
இன்றவர் தமைவ ளர்க்கும் ஈடிலாக் கருவி யாகும்.

சிந்தனைக் கருவி யாகத் திகழ்ந்திடும் மொழியை மக்கள்
வந்தனை செய்தே வாழ்வில் வரம்பிலாக் கலைகள் ஆக்கி
நிந்தனைச் செயலில் நீங்கி நிம்மதி யடைகின் றுர்கள்
சந்தமார் கல்லிற் சிற்பி தலைவனைச் செதுக்கி னற்போல்.

# வீரமறவன்

வீர மறவனுக்கு வெற்றிச் சிலைவடித்து
ஊர்நடுவே நாட்டுசெயல் உத்தமமே – சீரதிகம்
பெற்றஜெயச் சந்திரனின் பேர்ஊர் தமைவிளக்கி
நிற்கபல் லாண்டு நிலைத்து.

தெய்வத் திருவுருவைச் சிற்பிசெதுக் கித்தரவே
உய்வுதரும் கோயில்களின் உட்புறத்தே – மெய்யுணர்த்த
வைத்து வணங்குதல்போல் மாவீரர்ப் போற்றுதலும்
சொத்துமற வாதே துதி.

வீர சுவர்க்கம் அடையும் விறலோரை
ஆரமணிந் தேற்பர் அரம்பையர்கள் – போர்முனையில்
மாண்டாரே மாண்டார் மரித்தும் மரியாத
நீண்டாயுள் பெற்ற நிலை.

(28-1-1987)

# கட்டுரைகள்

# சைவத்தின் பெருமை

சைவத்தின் பெருமை என்பதனைச் சைவம் என்றும், அதன் பெருமை என்றும் இருகூறுகளாக வகுத்துக்கொண்டு முதலிலே சைவம் என்பதனை ஆராய்வோம். உலகத்திலே எண்ணிறந்த சமயங்கள் இருக்கின்றன. அவற்றுள் எங்கள் நாடாகிய இலங்கையிலே சைவம், கிறீஸ்தவம், பௌத்தம், ஸ்லாம் என்னும் நான்கு சமயங்களே உள. சைவம் என்றதும் சிலர் சைமசமயத்துக்கும் மரக்கறி உணவுக்கும் உள்ள மிக நெருங்கிய தொடர்புபற்றி உணவையே நினைப்பர். இவர்கள் கருத்துப்படி ஆடு, மாடு, மான், மரை, யானை முதலிய பல விலங்குகளும் சைவராதல் வேண்டும். மக்களுள் நூற்றுக்கு ஒரு வீதமானோர் மட்டுமே சைவராவர். வேறுசிலர் அதனை ஓர் சாதிப் பெயராகக் கொண்டு மக்களின் அந்நியோன்னிய வாழ்வுக்கும், அன்பு நெறிக்கும் மாறுகப் பிறருடன் கலந்து கொள்ளாமை, உடன் உண்ணுமை சாதி வித்தியாசம் பாராட்டுதல் முதலியவற்றையே சைவமென்பர். ஆனால் சைவம் என்னுஞ்சொல் இவ்விரு சாரார் கருதுகிறபடி உணவையோ ஒரு சாதியையோ ஒரு போதும் விளக்காது ஓர் உயர்ந்த கருத்தை உள்ளீடாககொண்டுள்ளது.

சிவன் என்ற சொல்லிலிருந்தே சைவன் என்ற சொல் பிறந்தது. எனவே சைவன் என்பதற்கு சிவனை வழிபடுபவன் என்பது பொருளாகும். சிவனை வழிபடுபவன் எவ்வாறு சைவன் எனப்பட்டானே அவ்வாறே அச்சிவனுல் அச்சைவன் பொருட்டு அருளப்பட்ட சமயமே சைவமெனப்படுவதாயிற்று இதனைத்,

''தெய்வஞ் சிவனே சிவனருள் சமயம் சைவம்
சைவம் வளர்க்கும் சம்பந்த மூர்த்தி''

என்னும் சிற்றம்பல நாடிகள் திருவாக்கால் அறியலாம். ஆகவே சிவனை முழுமுதலாகக் கொண்டதும் அச்சிவனுல் அருளப்பட்டதும், திருஞானசம்பந்தப் பெருமான் முதலிய ஞான வான்களால் வளர்க்கப்பட்டதும் அதனை வளர்க்க வந்தோர் அருளிய தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், சிவஞானபோதம், முதலிய பல மெய்நூல்கத்னை தன் பிரமாண நூல்களாகக் கொண்டதுமான சமயமே சைவம் என்பது துணியப்படும். திருமுறைகளிலே சைவம் என்பது சிவநெறி என்றும், சைவநெறி என்றும் பாராட்டப்படுகிறது.

# காந்தீயம் பரவிவரும் வேகம்

அன்பின் சொரூபமாக இந்த அவனியிலே இருந்து கொண்டு, சாதிமத பேதமின்றி அகில உலகத்திற்கும் அற முணர்த்தி வந்த காந்தியடிகள் மீளாச் சாந்தியடைந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. அடிகளின் தூயவாழ்க்கையும் அறவுரைகளும் இந்த மூன்று மாத காலத்திலே உலகமக்களின் கவனத்தை மிகத்தீவிரமாக ஈர்த்தது போல இதற்கு முன்னர் வேறெந்தப் பெரியாரின் வாழ்க்கையும் போதனைகளும் கவர்ந்தில. அடிகள் உயிருடன் இருந்த நாட்களில் நத்தை வேகத்தில் அகில உலகத்திலும் பரவி வந்த காந்தீயமானது அடிகளது பிரிவின்பின் மின்னல் வேகத்திலே பரவிவருகிறது.

அன்பர்கள் பலரும் சாதிசமய பேதமின்றி நின்று காந்திக் கழகங்களை மூலைமுடுக்கு எங்கணும் தோற்றுவிக்கின்றனர். பற்பல கூட்டங்களை நடத்துகின்றனர், அடிகளின் சேவைகளைப் பாராட்டுகின்றனர், அவைகளைச் செயலிலே கொண்டுவரப் பெருமுயற்சி செய்கின்றனர். இம்முயற்சிகளுள் ஒன்றாக ஹரிஜன மக்களுக்கு ஆலயங்களை திறந்து விடும் பிரச்சினை எமது யாழ்ப்பாணத்திலே உலவுகிறது. உள்ளத்தூய்மை பெற்றிருக்கும் யாழ்ப்பாண மாணவர்கள் இவ்விசயமாகப் பெருங்கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

முன்னைப் பெரியார்களுட் பெரும்பாலார் தாம்தாம் பிறந்துள்ள சமயமே சிறந்த சமயமென்றும், அதன்கண் சீர்திருத்தத்துக்கு யாதும் இல்லையென்றுங் கூறி நின்றதோடு, அஃதொழிந்த ஏனைச் சமயங்கள் யாவும் அத்துணைச் சிறப்புடையன அல்லவென்றும் மக்களுக்குப் போதித்தனர். காந்தி அடிகளோ தாம் பிறந்த இந்துசமயத்திலே குறை

யும் மற்றச் சமயங்களிலே நிறையுங் கண்டு, அதனையும் மற்றச் சமயங்களோடு சரிநிகர் சமயமாக்குதற்கு முனைந்து செயலாற்றினர். எந்த ஒரு சமய ஸ்தாபனத்தில் அதனை அநுட்டிக்கும் மக்களுள் ஒரு சாராருக்கு இடமளிக்கப்பட வில்லையோ அந்தச் சமயம் வளர்ச்சி குன்றிக்கொண்டு வந்து காலப்போக்கில் அழிந்து ஒழிந்துவிடும் என்பதே அடிகள் கண்ட குறைகளுட் பிரதானமானது. இந்துசமயத்தில் இருந்துவந்த இந்தக் குறையை அகற்றி அதனைப் புனித மாக்கவே அடிகள் ஹரிஜன சேவை செய்யத்தொடங்கி அதிற் பூரண வெற்றியுங் கண்டார்.

அடிகள் இந்த வெற்றியை ஒரு நாளிலோ அல்லது ஒரு மாதத்திலோ அடைந்துவிடவில்லை. மேடைப் பிரசங் கத்தினல் மட்டும் பெற்றுவிடவுமில்லை. எத்தனையோ எதிர்ப் புக்களையெல்லாம் பொருட்படுத்தாமல் இறுதிவரை பல தியாகங்களைச் செய்தே அடையவேண்டியிருந்தது. இலட் சியத்தைப் போலவே அதனை அடைதற்கு அநுட்டிக்கப் படும் வழிகளும் தூயனவாய் இருத்தல் வேண்டும் என்ப தில் அடிகள் பூரண நம்பிக்கை கொண்டே எச்செயலையும் ஆற்றிவந்தார். அதனலேயே அடிகள் மேற்கொண்ட இலட் சியங்கள் யாவும் மிகத் தூய்மையுடையனவாய் இருந்தும் அவை காலதாமதமாகவே பலனளித்தன. அடிகள் மறைந் ததும் அவைகள் யாவும் அதிவிரைவிலே பலனளிக்கத் தொடங்கிவிட்டன. இந்த வேகத்தினலேதான் காந்தீயத்தை எதிர்த்து நிற்கும் பிற்போக்குச் சக்திகள் யாவும் அழிந் தொழியும்.

(தூதன் 20-04-1948)

# உயர்வும் தாழ்வும்

மக்கள் வாழ்க்கையில் உயர்வுந் தாழ்வும் எத்தகையவர்களுக்கும் பொதுவானவை. இவை இரண்டும் பண்டை ஊழ் காரணமாக மக்களை அடைகின்றன என்பர் ஒரு சாரார். அவ்வாறு கூறுகின்றவர்களை மறுத்துக் கூறுவர் பிறிதொரு சாரார். எவ்வாறுயினும் இவை உண்டாதற்குரிய காரணங்கள் அநுபவத்திலே பல உள்ளன என்பதை யாவரும் ஒத்துக் கொள்ளுவர். செல்வம் காரணமாகச் சிலர் உயர்வு பெறுகிறுர்கள். அவர்களே செல்வம் குறைந்தபோது தாழ்வு அடைகிறுர்கள். இழிந்த செயல்களைச் செய்வதன் மூலம் சிலர் தாழ்வு அடைகிறுர்கள். அன்னவர்களே அந்த இழி செயல்களை விடுத்து நற்செயல்களைப் புரியும்போது உயர்வு பெறுகின்றனர். ஆகவே உயர்வு தாழ்வு என்னும் இவ் விரண்டும் காரியங்கள் என்பது தெளிவாகிறது. யாதேனும் காரணம் உள்ளவழி இவை தோன்றும். அஃது இல்லாதவிடத்துத் தோன்றமாட்டா. மனித இனம் முழுவதற்கும் பொதுவாயுள்ள இந்த உயர்வு தாழ்வுகளில் குறிப்பிட்ட ஒன்று எந்த இனத்தவர்களுக்கும் நிரந்தரமானதன்று.

உயர்ந்த சாதியார் என்னுந் தொடர் வேளாளர், பிராமணர் முதலிய குலத்தவர்களையும், தாழ்ந்த சாதியார் என்னுந் தொடர் பள்ளர், நளவர் முதலிய குலத்தவர்களையும் உணர்த்த வழங்கப்பட்டு வந்தன. இப்பெயர்கள் காரணம் பற்றிய குறியீடுகள் என்றுஞ் சொல்லப்பட்டன. அவ்வாறுயின் உயர்வு வேளாளர் முதலியோரிடமும், தாழ்வு பள்ளர் முதலியோரிடமும் நிரந்தரமாய் மாறுதலின்றி இருத்தல் வேண்டும். உலக அநுபவத்திலோ அவ்வாறில்லை என்பது காணக்கிடக்கிறது. அன்றியும் பறையன் ஒருவன் உயர்ந்த பண்பாடுகள் நிறைந்தவனுகக் காணப்படின் அவன் உயர்ந்த சாதியான் என்றும், வேளாளன் ஒருவன் இழிந்த இயல்புகள் உடையவனுகக் காணப்படின் அவன் தாழ்ந்த சாதியான் என்றும் அழைக்கப்படுதல் வேண்டும். உலக வழக்கு அவ்வாறுமில்லை.

உயர்ந்த சாதியார், தாழ்ந்த சாதியார் என்னும் இத் தொடர்களும், இவையுணர்த்தும் பொருளும் ஒன்றோடொன்று பெரிதும் மாறுபட்டு இருத்தலை அறிந்துதான் இற்றைக்கு சில ஆண்டுகள் வரையிலும் தாழ்ந்த சாதியார்கள் என்று மற்றவர்களால் அழைக்கப்பட்டு வந்த பள்ளர், பறையர், நளவர் முதலியவர்களை ஒருங்கே குறிப்பதற்கு ''தாழ்த்தப்பட்டவர்கள்'' என்னும் ஒரு சொல் புதுவதாக ஆக்கப்பட்டு வழங்குவதாயிற்று. இச்சொல் ஆங்கில அரசாட்சியார் காலத்திலேயே தோன்றியதாகும். இதனை ஆக்கி வழங்கத் தொடங்கியவர்கள், இந்த ஏழை மக்களின் தாழ்வுக்குரிய காரணங்களை நன்குக ஆராய்ந்து, அக்காரணங்களுக்குப் பொறுப்பாளிகள் இவர்கள் அல்லர் என்றும், பொறுப்பாளிகள் பிறர் என்றுந் தெளிந்தே இவர்களைத் தாழ்வுக்கு கருத்தாவாக்காமல் செயற்படு பொருளாக்கித் ''தாழ்த்தப்பட்டவர்கள்'' என்று முடிவு செய்தனர். பொருளளவிற் சிறிது வேறுபாடு இருப்பினும் ''ஒடுக்கப்பட்டவர்கள்'' என்பதும் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதன் பரியாயப் பெயராகவே வழங்கப்படுகிறது.

எமது சமூகத்தவர்களின் முன்னேற்றமற்ற நிலைமையைக் கண்டு இரக்கங்கொண்டு ''தாழ்த்தப்பட்டவர்கள்'' ''ஒடுக்கப்பட்டவர்கள்' என்னுஞ் சொற்களை ஆக்கிப் பிரயோகத்திற்கு கொண்டுவந்த அருளாளரின் உள்ளக்கிடக்கை அச்சொற்களின் ஆழ்ந்த கருத்துமூலம் தம்மைப் பச்சாத்தாபப்படுத்துதலை உணர்ந்த சாதி இந்துப் பண்டிதர்கள் சிலர் அச்சொற்களைப் பிரயோகிக்க மனமற்றவர்களாய்த் ''தாழ்ந்த சாதியர்கள்'' என்பதனையே இன்றைக்கும் தங்கள் மேடைப் பேச்சுக்களிலும், பத்திரிகைகளிலும் உபயோகித்து வருகிறார்கள். அன்றியும் இவ்விரு புதிய சொற்களும் எம்மை இழிவுபடுத்துவதாகவும் பிதற்றுகிறார்கள். இவர்கள் பேச்சிலும் எழுத்திலும் மயங்கும் கல்வியறிவற்ற எம்மவர் சிலரும் இச்சொற்களைக் கண்டு வெருளுகிறார்கள். உண்மையில் இச்சொற்களைக் கண்டு அஞ்சி நடுநடுங்கி பச்சாத்தாபப்பட வேண்டியவர்கள் இரக்கமற்ற சாதி இந்துக்களேயாவர். கல்வியறிவும் ஆராய்ச்சியும் உள்ள எம்மவர்

கள் தங்களைத் தாங்களே ''தாழ்த்தப்பட்டவர்கள்'' என்றோ ''ஒடுக்கப்பட்டவர்கள்'' என்றோ கூறிக்கொள்ளச் சிறிதும் பின்நிற்காது தாழ்த்தப்பாட்டையும் ஒடுக்கப்பாட்டையும் தகர்த்தெறியப் பெருமுயற்சி செய்யவேண்டும். எமக்கு இன்றிருக்கும் தாழ்த்தப்பாடுகளும் ஒடுக்கப்பாடுகளும் முற்றாக நீங்கியபின் நாம் இச்சொற்களைக்கூட ஆட்சியில் வைத்திருக்க வேண்டியதில்லை. ஆனால், தாழ்ந்த சாதியார்கள் என்பதை என்றைக்குமே ஏற்றுக்கொள்ளக் கூடாது.

''எங்குஞ் சுதந்திரம் என்பதேபேச்சு — நாம்
எல்லோருஞ் சமமென்ப துறுதி யாச்சு''

என்று தமிழ் முழக்கஞ் செய்த பாரதியாரின் நவயுக ஞாயிறு நாவலந்தீவில் உதயமாகிவிட்டது. இன்னுஞ் சில பாகைகள் மேலே உயர்ந்ததும் அதன் ஒள்ளிய கிரணங்கள் இந்த யாழ்ப்பாணத்தின் அந்தகாரத்தையும் போக்கி ஒளியுறச் செய்தே தீரும். அப்போது எல்லோரும் ''மக்கள்'' என்ற ஒரே பெயரைப் பெற்று,

''சங்குகொண் டேவெற்றி ஊதுவோமே — இதைத்
தரணிக்கெல்லா மெடுத்து ஓதுவோமே''

என்று பாடி மகிழலாம்.

நிற்க, தமது பொதுசன சேவையின் ஆரம்ப காலங்களிலே, ''தாழ்த்தப்பட்டவர்கள்'' ''ஒடுக்கப்பட்டவர்கள்'' என்ற சொற்களைத் தாராளமாகப் பிரயோகித்து வந்த மகாத்மா காந்தி அடிகள், இடையிலே அவற்றை உபயோகிப்பதை நிறுத்திவிட்டு ''ஹரிஜன்'' என்ற பதத்தை ஆட்சியிற் கொண்டுவந்துள்ளார். அடிகள் இவ்வாறு செய்தமைக்குப் பிரதான காரணங்கள் இரண்டுண்டு. பிறர் மனத்தை நியாயத்தின் பேரிற் புண்படுத்துதலும் ஹிம்சையே என்ற பெருநோக்குடைய அஹிம்சாமூர்த்தி ஆகிய காந்திமகான், குற்றவாளிகளாகிய சாதி இந்துக்களைத் தானும் மனம்வருந்த அனுமதிக்கமாட்டாரல்லவா? அடிகளின் இந்த அஹிம்சைக் கொள்கையே அச்சொற்களின்

நீக்கத்துக்கு ஏதுவாயிற்று. இது முதற்காரணம். ''ஹரிஜன்'' என்பது கடவுளின் பிள்ளை என்ற பொருளில் இப்பொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சிறப்புப் பெயராகவும், வருங்காலத்தில் எல்லோருக்குமே பொதுப் பெயராகவும் அமையலாம் என்ற மேலான எண்ணம் அதன் ஆக்கத்துக்குக் காரணமாயிற்று. இது இரண்டாவது காரணம். உயர்ந்த வேதாந்த தத்துவத்தையும் காந்தி அடிகளின் கோட்பாட்டையும் ஒன்றுபடுத்தி மகாத்மாகாந்தி பஞ்சகத்திலே,

''மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்''

என்று பாரதியார் பாடியுள்ளமையுங் காண்க, இந்த ''ஹரிஜன்'' என்ற பதம், ''மகன்'' என்ற தமிழ்ச் சொல்லின் கருத்தையும் 'ஹரிஜனர்' என்ற பதம், 'மக்கள்' என்ற தமிழ்ச் சொல்லின் கருத்தையும் உணர்த்துவனவாகும்.

''பயனில்சொல் பாராட்டுவானை மகன் எனல்
மக்கள் பதடி எனல்''

என்ற திருவள்ளுவரின் பிரயோகம் இங்கு சிந்திக்கத்தக்கது. மனிதர்களைக் கடவுளின் பிள்ளைகள் என்ற அர்த்தத்திலேயே பண்டைத் தமிழ்நூல்கள் எல்லாம் ''மக்கள்'' என்று குறிப்பிட்டுள்ளன. மக்கள் என்பது பிள்ளைகளையும் மனிதர்களையும் இன்றும் உணர்த்துவதும், சங்கநூல்களிலே சாதிவேறுபாடுகள் காணப்படாமையும் இதற்குச் சான்றாகும். அன்றியும் இக்கருத்து எல்லா மதத்தினருக்கும் உடன்பாடுமானதே.

இனி, ''சிறுபான்மைத் தமிழர்'' என்றது வடமாகாணத்தில் வசிக்கும் தாழ்த்தப்பட்டவர்களாகிய எமக்குச் சமீபத்தில் நாமாகவே சூட்டிக்கொண்ட பெயராகும். இலங்கையின் குடிசனத்தொகையில் தமிழர் சிறுபான்மையினர்

என்ற அர்த்தத்தில் நாம் இப்பெயரை இட்டுக்கொள்ள வில்லை. இலங்கை மக்களில் தமிழர் சிறுபான்மையினராய் இருப்பதையிட்டு நாம் கவலையே கொள்ளவில்லை. ஓரள விற்கு மகிழ்ச்சியே கொள்ளுகிறோம். தமிழர் பெரும்பான் மையினராய் இருந்திருப்பின் தாழ்த்தப்பட்டவர்களாகிய எமது நிலைமை இன்றைய பரிதாபநிலையிலும் பார்க்க மிக மிக மோசமானதாகவே காணப்பட்டிருக்கும். அதனை விளக் கிக் கூறவேண்டிய அவசியமே இல்லை. ''தமிழருக்குள்ளும் தாழ்த்தப்பட்ட தமிழர் சிறுபான்மையினர்'' என்ற கருத்தை உட்கொண்டுதான், தாழ்த்தப்பட்டவர்கள் என் பதற்குப் பதிலாகச் ''சிறுபான்மைத் தமிழர்'' என்பதனை நாம் இப்பொழுது வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

(தூதன் 1-11-1947)

# திருவள்ளுவர் கண்ட சேமநிதி வங்கி

பழந் தமிழ் மக்கள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளையும் அடைதலே மக்கட் பிறப்பின் மாண் பயனெனத் கொண்டு அறவழியிற் பொருளீட்டி அப்பொருளால் அறஞ்செய்தும் இன்பம் நுகர்ந்தும் வாழ்க்கை நடத்திப் பொருளின்பங்களின் நிலையாமையினைத் தம் அநுபவத்தே முற்றக்கண்டு நிலைத்த பொருளிலும் நிலைத்த இன்பத்திலும் ஆர்வமுடையராய்த் துறவு மேற்கொண்டு வீட்டு முயற்சியிலே ஈடுபட்டுப் பிறவிப்பயன் பெற்று வந்தார்களென்பது தொல்காப்பியம் திருகுறள் முதலிய பண்டைப் பனுவல்களால் அறியக்கிடக்கிறது.

இக்கால மக்கள் பொருளின்பங்களை மட்டும் அடைதலையே வாழ்க்கைப் பயனாகக் கொண்டமையால், அறநெறி திறம்பிப் பொருளீட்டுதற்கண்ணும் அப்பொருள் கொண்டு இன்பம் நுகர்தற்கண்ணுமே முனைந்து நிற்கின்றனர். பொருளீட்டுதல் அறமும் இன்பமும் எய்துதற்கே என்னும் உண்மையினை உணர்ந்தால் அறநெறி திறம்பி எவரும் பொருளீட்டுதல் செய்யார். அவ்வாறின்றி இன்பமொன்றுமே பொருளாற் பெறும் பயனெனக் கொண்ட இக்கால மக்கள் தம்வாழ்நாள் முழுவதையும் பொருளீட்டுதற்கண்ணும் ஈட்டிய அதனைக் காத்தற்கண்ணும் கழிக்கின்றனர். பொருளீட்டுதல் துன்பமென்பதும், அறியாதார் எவருமிலர். இவ்வுண்மையினைப் பொருளாதார நூலறிவில் மிகச்சிறந்தவரான மேலைநாட்டு அறிஞர்கள் உணர்ந்து பொருளையீட்டுதற்குப் பற்பல புதிய துறைகளிலே முயற்சி செய்வதோடு நின்றுவிடாமல், ஈட்டிய அப்பொருளைக் காத்தற்கும் முந்திய துறைகளின் வேறாய்ச் சேமநிதிவங்கி, ஈட்டுவங்கி, ஐக்கிய நாணய சங்கம், இன்ஸூரன்ஸ் கம்பேனி முதலிய பல காப்பு நிலையங்களையும் ஆக்கித் திறம்பட நடத்தி வருகின்றனர்.

இங்கு கூறிய காப்பு நிலையங்களுள் ஒன்றாகிய சேமநிதி வங்கி என்பது ஒவ்வொரு தபால் நிலையத்திலும் உண்டு.

இந்த வங்கி பொதுமக்களின் பொருள் விருத்தியை முன் னிட்டு அரசினர் பொறுப்பில் நடத்தப்படுகிறது. செல்வர் கள் தமது பொருளைப் பாதுகாத்தற்கும், வறியவர்கள் தமது உழைப்பில் சிறுபகுதியை மிச்சப்படுத்துதற்கும் சேமநிதி வங்கி அருந்துணையாகி விளங்குகிறது பணக்காரன் ஏழை என்ற வேறுபாடின்றி எல்லா மக்களுக்கும் ஒப்பப் பயனளிக்கும் சேமநிதி வங்கிகளைப் பொதுமக்கள் யாவரும் விரும்பிப் பயன் படுத்தி நன்மையடைய வேண்டும் என்பதற்காகவே அவ ரவர் சேமிக்கின்ற பணத்துக்கு ஒரு குறித்தவீத வட்டியும் அரசினராற் கொடுக்கப்படுகின்றது. சேமநிதி வங்கியிற் பணம் கட்டுபவர் ஒவ்வொரு தடவையும் இவ்வளவு தொகை தான் கட்டுதல் வேண்டுமென்ற நியதி இல்லை. தத்தம் இயல்புக்கு ஏற்பப் பெருந்தொகையோ சிறுதொகையோ கட்டி வரலாம். பத்து ரூபாக் கட்டப்பட்ட அல்லது அத னிலுங் குறைந்த சிறுச் சிறு தொகைகளாகக் கட்டப்பட் டுப் பத்து ரூபா மொத்தமாகி வந்த நாளின் அடுத்த மாதம் முதற்தேதி தொடக்கம் பணம் எடுக்கப்படும் மாதத்தின் முதற்தேதி வரைக்கும் கட்டப்பட்டுப் பூரணமான ஒவ் வொரு பத்து ரூபாவுக்கும் ஆண்டொன்றுக்கு நூறு ரூபா வுக்கு இரண்டு ரூபா நாற்பது சதவீதம் (2.4%) வட்டி அளிக் கப்படுகிறது. இதனால் பணமுடை உண்டாகுங் காலங்களிலே பொதுமக்கள் பெரும்பயன் அடைவதோடு, பணத்தை மிச் சம் பிடிக்கவும் பயின்று கொள்ளுகின்றனர்.

நிலையாமையைத் தனக்கு இயற்கையாகவுடைய செல் வமானது மேலே கூறப்பட்ட காப்பு நிலயத்தை அடைந்து நிலைபேறு எய்திப் பெருகித் தன்னை உடையானுக்கு எய்ப் பினில் வைப்பாய்ப் பின்னுதவுவது போலவே, நல்வழியில் ஈட்டிய பொருள்கொண்டு செய்யப்படும் அறமும், அதனைச் செய்தானுக்குப் பின்னுதவும் என்பதே ஆசிரியர் திருவள்ளு வர் கண்ட சேமநிதி வங்கியாகும். அதனை அறத்துப்பாலிலே ஈகை என்னும் அதிகாரத்திலே ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

''அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

என்பது அது. இக்குறளில், ஒருவன் எவ்வாறு பொருளைச் சேமித்து வைக்கவேண்டும் என்பது ஆசிரியராற் குறிக்கப்பட்டுள்ளது. ''பொருள் இல்லாதவருடைய மானம் முதலியவற்றை அழிக்கின்ற பசிப்பிணியை நீக்குக. அவ்வாறு நீக்குதல் பொருளை வைத்திருப்பவன் ஒருவன் அப்பொருள் பின் தனக்கே உதவுமாறு அதனைச் சேமித்து வைக்கும் இடமாதலின்'' என்பது இதன் கருத்து. இக்குறளிலே ஆசிரியர் மிகச் சுருக்கமாகவும் சாதாரணமாகவும் தாம் கூறிய மேற்கோளைச் சாதித்தற்கு எடுத்துக் காட்டியிருக்கும் ஏதுவின் நயம் பெரிதும் பாராட்டுதற்கு உரியதாகும். அறங்களுட் சிறந்தது ஈகை. அவ்வீகை பலவகைப்படும், அவற்றுள்

''உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே''

என்பவாதலின், வறியாருடைய பசிப்பிணியை நீக்கி உயிர்ப் பிச்சை கொடுத்தல் மிகச்சிறந்த பேரறமாயிற்று. நிலையில்லாத உண்டியைக் கொடுத்து நிலையான உயிரை உடம்பில் நிறுத்துதல் போலவே அதன் பயனான அறமும் அழியாது நிலைபேறாய்ப் பிற்பயக்குமென்பது பெறப்பட்டது.

சேமநிதி வங்கியிற் செல்வர், வறியவர் என்ற வேறுபாடின்றிப் பணங்கட்டி வர உரிமை இருத்தல் போலவே, செய்தற்கு எளிமையுடைய அற்றார் அழிபசி தீர்த்தலும் எத்திறத்தவர்க்கும் உரியதென்பது

''யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி''

என்னும் திருமூலர் திருவாக்காலும், சேமநிதி வங்கியிற் சிறுச் சிறு தொகைகளாகக் கட்டப்பட்ட பணம் சேர்ந்து பத்து ரூபாவாகி வட்டியாகிய பயனை அளிப்பது போலவே, சிறுகச் சிறுகச் செய்யப்பட்டுவரும் அற்றார் அழிபசி தீர்த்தலாகிய அறமும் காலப்போக்கிற் பெருகிப் பயனளித்தலாலும், பணமுட்டு உண்டாகும்போது சேமநிதி வங்கியிற் கட்டப்பட்ட பணம், அதனைக் கட்டினவனுக்கு உதவுவது போலவே அற்றார் அழிபசி தீர்த்தலாகிய பேரறந் தலைப்பட்டாற்கு இடர் உண்டாகும்போது அவ்வறமே துணைநின்று இடர் களைதலாலும் அவை ஒப்பாகுமென்று கண்டுகொள்க.

(சைவபோதினி 17-09-1939)

# இதுவும் காந்திஜீ காட்டிய வழியே!

அண்ணல் காந்தி அமரரான செய்தியைக் கேள்வியுற்று அகில உலகமும் துக்கசாகரத்தில் மூழ்கிக் கிடந்த நாட்களிலும், அடிகளின் புனித அஸ்தியானது கீரிமலைத் தீர்த்தத்திலே கரைக்கப்பட்ட நாட்களிலும், எமது யாழ்ப்பாணத் தமிழர்கள் பற்பல கூட்டங்களிலும் சராமரியாகப் பொழிந்து தள்ளிய காந்தீயப் பேச்சுக்கள் யாவற்றையும் இவர்கள் பேசிமுடிப்பதற்குப் பல ஆண்டுகள் முன்னரே தமது தீர்க்க திருஷ்டியினுல் அறிந்து போலும் மகாகவி பாரதியார்,

''கூட்டத்திற் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்திற் கொள்ளாரடி – கிளியே
நாளில் மறப்பாரடி''

என்பதாகவும் பாடிச் சென்ருர் என்று கருதவேண்டி இருக்கிறது.

''மிருகபலி செலுத்தி வெறியாட்டயர்தல், வேசியரை ஆட்டுவித்தல் ஆதியாம் காட்டுமிராண்டிச் செயல்களுக்கு நிலைக்களனுக இருந்துவரும் சைவக்கோயில்களையும், வேலையற்ற வீணர்கள் சோம்பியிருந்து வம்பளத்தற்கும் சீட்டாடுதற்கும் இடங்கொடுக்கும் மடங்களையும் காந்தி ஆச்சிரமங்களாக மாற்றி அமைக்கப் போகிருேம்'' என்று கத்திஞர்கள். ''மது அரக்கனைப் பிடரியிற் பிடித்துத் தள்ளிக் கொண்டுபோய் வில்லூன்றி மயானத்திற் கொள்ளிவைக்கப் போகின்ருேம். அம்மயான பரிபாலன சபையார் அதற்கு இடந்தராவிடில், வங்காளவிரிகுடாவில் ஒரு குழிதோண்டிப் புதைக்கப் போகிருேம்'' என்று வாய்ப்பறை முழக்கினர்கள். ''பற்பல ஊழல்கள் மலிந்து கிடப்பினும், ஓரளவாதல் பொதுமக்களைத் திருப்திப்படுத்தும் முறையில் நடத்

தப்படாவிடில், கிடைத்துக் கொண்டிருக்கும் பெரிய வருமானம் குறைந்துவிடுமே என்ற அச்சம் காரணமாகச் சிறிது நல்லமுறையில் நடத்தப்படும் சைவாலயங்களையே பண்டு போல் ஆலயங்களாக இருக்கவிட்டு, அவற்றின் திருக்கதவுகளைச் சகல இந்துக்களுமாகத் திறந்துவிட்டு ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை இதோ ஆதரிக்கப் போகிறோம், தென்னிந்தியாவிலேயுள்ள வைதீகர்கள் முன்னொருபோது முட்டுக்கட்டை போட்டவாறு இங்குள்ள சாதி இந்துக்களும் முட்டுக்கட்டை போடவந்தால், அப்பர் சுவாமிகளின் ''பண்ணினேர் மொழி'' என்னும் முதற்குறிப்பினையுடைய அருமைத் தேவாரப் பாடலைச் சிறிது மாற்றி,

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
எண்ணில் கோயில் எழுந்தருள் ஈசரோ
கண்ணி னுலுமைக் காண ஹரிஜனர்
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே.

என்று பாடிக்கொண்டு சத்தியாக்கிரகஞ் செய்து திறப்பிக்கப் போகிறோம்'' என்று வீரகர்ச்சனை செய்தார்கள்.

இவைபோல இன்னும் பலவாறாக எழுந்த சாதி இந்துக்களின் கூச்சல்களை அன்று கேட்டு இன்று ஏமாந்து நிற்கும் ஹரிஜன வாலிபர்கள், காந்திஜீ காட்டிய பலவழிகளுள் ஒன்றைப் பற்றி இப்பொழுதுதான் சிந்தித்துத் தெளியலாயினர். இந்த வழியைப் பின்தொடர்ந்து இந்திய ஹரிஜனர்கள் பெற்றுள்ள முன்னேற்றங்களையும் கண்டுகொண்டார்கள். காந்தி அடிகளைப் பற்றியும், அடிகளின் கடவுட்கொள்கையைப் பற்றியும், அடிகள் பெற்ற அநுபூதி ஞானத்தைப் பற்றியும் சந்தேக விபரீதமின்றி அறிந்துகொண்ட எமது ஹரிஜன வாலிபர்கள், காந்தி வழிநின்று எமது சமூகத்திலுள்ள அறிவற்ற ஏனைய ஏழைமக்களையும் அவ்வழியிலே கொண்டுசெல்லக் கிளர்ச்சி செய்ய முன்வந்துள்ளார்கள்.

''சத்தியமே ஈசன்; உயிர் சாரும் வழியஹிம்சை
நித்தியமுங் கைக்கொண்டு நில்''

என்று உபதேசித்து இந்த வையகத்தின் மயக்க இருள் போக்கிய ஞானபானுவாம் காந்தி அடிகளே, ஹரிஜனர் பிரவேசத்தை அநுமதிக்காத எந்த இந்து ஆலயத்தையும் எட்டிப் பார்த்ததில்லை. அப்படியிருக்க இந்த யாழ்ப்பாணத் திலுள்ள சைவாலயங்களுக்கு ஹரிஜனமக்கள் போய் வெளி யில் நின்று வழிபடுவதை நிறுத்தி, அக்கோயில்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று வாலிபர்கள் கிளர்ச்சி செய் தலை யார்தான் உவப்புடன் வரவேற்காமல் இருக்கமுடி யும்? இதுவும் காந்திஜீ காட்டிய வழியே. ஆதலால், இந்த அறக்கிளர்ச்சியானது யாழ்ப்பாணத்திலுள்ள சகல ஹரி ஜனர் மத்தியிலும் தோன்றுமாறு ஒவ்வொரு படித்த ஹரி ஜன வாலிபனும் அஹிம்சா நெறிநின்று தொண்டாற்ற வேண்டியது கடமையாகும்.

(தூதன் 28-05-1948)

# சிறுகதை

# தெளிவு

கோயிற் பூசையைப் பகல் இரண்டுமணி வரையில் முடித்துக் கொண்டு பஞ்சாட்சரஐயர் வீட்டுக்குத் திரும்பி வந்தார். வழியில் தம்முடைய வடலிக் காணிக்குள்ளே அயல்வீட்டு அருணுசலம்பிள்ளையின் பசுமாடு ஒன்று புகுந்து நின்று, அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்த காய்ந்த புற்களை மேய்ந்து கொண்டு நிற்பதைக் கண்டார். உடனே கண்ணுக்கு எதிர்ப்பட்ட கற்களை எல்லாம், சிறிது நேரத்துக்கு முன்பு கல் வடிவிலே காட்சிதந்த வீரபத்திரப்பெருமானுக்குப் பாலாபிஷேகம் செய்த, தமது கைகளாற் பொறுக்கிஞர். அருணுசலம்பிள்ளை பேரில் தமக்கிருந்த வெறுப்பு முழுவதையும் அந்தக் கற்களிலே தாபனஞ்செய்து பசுமாட்டுக்கு எறிந்து அதனைக் கலைத்துவிட்டு நேரே வீடு வந்து சேர்ந்தார். அருணுசலம்பிள்ளையை நேர்முகமாகச் சந்தித்துத் தண்டித்துவிட்டதாகவும், அவர் தமக்குப் பயந்து வாய் பேசாது ஓடிவிட்டதாகவும் எண்ணிக்கொண்ட ஐயர் தமது வீட்டுத்திண்ணையில் விரிக்கப்பட்டிருந்த அழுக்கு நிறைந்த மான்தோல் மீது சால்வையை உதறிப் போட்டு விட்டு உட்கார்ந்து கொண்டார்.

அவருடைய சிந்தனை முழுவதும் அருணுசலம்பிள்ளைமீதே குவிந்திருந்தது. அருணுசலம்பிள்ளையின் வளவுக்குள் நின்ற பனையிலிருந்து ஐயர் வளவுக்குள் விழுந்து மாயமாய்மறைந்த ஒரு பனங்காய் முக்காழியையிட்டுப் பெண்களுக்கிடையே ஆரம்பித்த வாய்ப்பேச்சு, ஐயரும் பிள்ளையும் அயலவர்களாய் இருந்த காரணத்தால் நாளுக்குநாள் புதுப்பிக்கப்பட்டு வளர்ந்து ஆண்களுக்கிடையிலுங்கூடப் பெரும் பகையை உண்டாக்கியிருந்தது. இப்பொழுது அவர்கள் இருவரும் பரமவிரோதிகளாய்க் கொடுக்கல் — வாங்கல், பேச்சு - வார்த்தை ஒன்றுமின்றி இருந்தார்கள். அந்தப் பனை, குறித்த பனங்காய் முக்காழியைத் தங்களுக்குத் தானம் கொடுத்ததாக ஐயரின் மனைவியார் சமாதானங்

கூறியிருந்தபடியால், திருட்டுக் குற்றத்திற்காக இரகசியத் திலாதல் பிராயச்சித்தம் நடத்தப்படவில்லை.

சிற்றூர் என்பது தென்மராட்சியிலுள்ள ஒரு சிறு கிராமம். இந்த ஊருக்குள்ள சிறப்பெல்லாம் இங்குள்ள வீரபத்திரகோயில் ஒன்றினுலேதான். ஆடு வெட்டுவதிற் சுன்னுகம் ஐயனுர் கோயிலுக்கு அடுத்தபடியாக பிரசித்தி பெற்றிருந்தது இந்தச் சிற்றூர் வீரபத்திர கோயிலே. பஞ்சாட்சர ஐயரின் பாட்டனுர் காலம் முதல் இன்றுவரை ஒருவித மாற்றமுமின்றி நடந்து வருகிறது. இப்பொழுது இதன் சொந்தக்காரர், பூசகர், பரிசாரகர், ஏன்? பேய் பிடித்தவர்களுக்கு குழையடித்துப் பார்வை செய்கையில் இதன் மூர்த்தியாகிய வீரபத்திரர்கூட எல்லாம் பஞ்சாட்சரஐயரே. மூன்றும் வகுப்பு வரை படித்துள்ள இவருக்குப் பஞ்சாட்சரஐயர் என்று பெயரிடப்பட்டிருந்தும், பஞ்சாட்சரத்தில் எழுத்துக்கள் ஆறோ அல்லது ஏழோ என்று இவருக்கு உண்டான ஐயம் இன்னுந் தீர்ந்தபாடில்லை. எவரையேனும் கேட்டுச் சந்தேகத்தை நிவிர்த்தி செய்துகொள்ளுதல் தமது கௌரவத்துக்குக் குறையாகும் என்ற மனப்பான்மை உடையவர் ''பஞ்சாட்சரத்தில் ஐயமுடையவர்'' என்ற கருத்தில் இவருக்குப் பெயரிட்டிருக்கிறுர்கள் என்று சொல்லி இவர் கல்வியறிவைப் பரிகசிப்பதில் அருணுசலம் பிள்ளைக்கு ஒரு தனித் திருப்தி உண்டு. ஐயரின் வடமொழிப் பயிற்சி செவியைப் பொறுத்து உண்டான பழக்கமேயன்றிக் கண்ணையோ கையையோ உபயோகித்தும் ஏற்பட்டதன்று. மந்திர சுலோகங்களைத் தப்புந்தவறுமாய் ஒப்பிக்கினும் உரத்த தொனியுடையவராயும், ஊருக்கே ஒற்றைப் பிராணமராயும் இருந்ததால் நல்ல பேரும் புகழும் வருமானமும் பெருகி வந்தன.

பட்டினத்தில் ஆங்கிலம் கற்றுக்கொண்டிருந்த, ஐயரது ஏகபுத்திரன் மகேஸ்வரன் படலை திறந்து கொண்டு உள்ளே வருதலைக் கண்ட அவர் மிகுந்த கலக்கமடைந்தவராய்த் திண்ணையை விட்டு எழுந்தார். ''என்ன தம்பி, ஏன் வந்தாய்? கல்லூரியில் மறுபடியும் தொற்றுநோய் பரவியுள்

ளதா?'' என்று பரபரப்புடன் கேட்டார். ''அப்படி ஒன்றும் எங்கள் கல்லூரியில் நடக்கவில்லை. இந்தியாவில் நடந்து கொண்டிருந்ததே ஹரிஜன ஆலயப் பிரவேசம் என்னுந் தொற்றநோய், அது சிதம்பரத்துக்கும் தொற்றிவிட்டதென்று இன்றைய பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது. சிதம்பரக் கதவும் கடைசியாக ஹரிஜனங்களுக்குத் திறக்கப்பட்டுள்ளதைப் பாராட்டிப் பத்திரிகை ஆசிரியர் அரியதொரு தலையங்கம் எழுதியிருக்கிறார். அவரும் எங்களைப் போல ஒரு பிராமணராமே. இனித் தாமதமேன்? முன்பு நீங்கள் எனக்கு வாக்களித்தபடி எங்கள் கோயிலைத் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் திறந்து விடலாந்தானே இதன் பொருட்டாகவே நான் கல்லூரியிலிருந்து ஒருகிழமை 'லீவு'' எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று சொல்லி நிறுத்தினன் மகேஸ்வரன். ஐயர் ஒன்றும் பேச இயலாதவராய் ஒரு பெருமூச்சு விட்டுககொண்டு திண்ணையிலேயே மறுபடியும் அமர்ந்து சிந்திக்கலானர்.

சிற்றூரில் சைவப்பாடசாலை ஒன்றுமில்லை, பழுத்த சைவாபிமானியாகிய அருணசலம்பிள்ளையின் தூண்டுதலால் ''இந்துசமய பாதுகாப்பு மகாசபையார்'' பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கப் பலமுறை முயன்றும் அவர்கள் முயற்சி பலிக்காமற் போய்விட்டது. ''மகாசபையிற் போதிய பணமில்லை'' என்றும், ''மகாசபைக்குப் பெருங்கடன் இருக்கிறது'' என்றும் வெளியிற் சொல்லிக்கொண்டார்கள். உண்மைக் காரணம், சாதி இந்துப் பிள்ளைகளும் தாழ்த்தப்பட்டோர் பிள்ளைகளும் ஒன்ருகப் படிக்க நேர்ந்துவிடுமே என்ற பயந்தான். அங்கு இருந்தது மிஷன் பாடசாலை ஒன்றுதான். அதுவும் ஒரு பிரதம பாடசாலையே. அவ்வூர்ப் பிள்ளைகளின் மேற்படிப்பு ஐந்தாம் வகுப்பு வரைதான். அந்தக் கிராமத்தில் பிராமண வீடு ஒன்றும், வேளாளர் வீடுகள் இருபத்தைந்தும், தாழ்த்தப்பட்டோர் வீடுகள் நாற்பதுக்குக் கூடவும் இருந்தன. கிராமப் பிள்ளைகள் எல்லோரும் அந்தப் பாடசாலையிலேயே கல்விகற்று வந்தார்கள். பாடசாலையின் தலைமை ஆசிரியர் மட்டுமே கிறீஸ்தவர்;

அருணாசலம்பிள்ளையின் சொந்தக்காரர். இப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் பதவியை முன்னிட்டே கிறீஸ்தவசமயம் புகுந்தவர். சாதிவித்தியாசம் பாராட்டுவதிலே மகாசமர்த்தர். இவரைப் போன்ற சந்தர்ப்ப வேஷதாரிகளாலேயே கிறீஸ்தவசமயம் கிராமப்புறங்களிற் பரவவில்லை என்பதைப் பாதிரிமார்கள் அறியமாட்டார்கள். இவர் குடும்பத்தைத் தவிர வேறு கிறீஸ்தவ குடும்பம் ஊரில் இல்லை.

சமீபத்தில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் ஆண்டுவிழாவில் நிறைவேற்றப்பட்ட, 'தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாணவர்கள் பெரும்பான்மையினராய்க் கல்வி கற்கும் பாடசாலைகளிலே அச்சமூகத்தைச் சார்ந்த ஆசிரியர்களுக்கும் படிப்பிக்க இடம் அளிக்க வேண்டும் என்று கல்வி மந்திரியாரையும், பாடசாலை முகாமைக்காரர்களையும் இந்த மகாசபை பணிவாக வேண்டிக் கொள்ளுகிறது' என்னும் தீர்மானம் ஒன்று மேற்படி பாடசாலை முகாமைக்காரர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் காரிய நிர்வாகசபை அங்கத்தினர்கள் சிற்றூருக்குச் சென்று கூட்டம் நடத்திக் குறித்த ஆசிரியர் நியமன விஷயத்திலே கிளர்ச்சி செய்யுமாறு அங்குள்ள தாழ்த்தப்பட்டவர்களைத் தூண்டிவிட்டனர் அவர்களும் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். இந்தக் கிளர்ச்சியின் எதிரொலியும் முகாமைக்காரர் கவனத்திற்கு வராமலில்லை. இந்த இக்கட்டான நிலைமையில் தானியேல் என்னும் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பரம்பரைக் கிறீஸ்தவ உபாத்தியாயர் ஒருவரை உதவி ஆசிரியராக நியமித்துத் தாழ்த்தப்பட்டவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதோடு, அந்த உபாத்தியாயர் செய்யும் பொதுசன சேவைகள் மூலமாகக் காலக்கெதியில் அங்குள்ள தாழ்த்தப்பட்டவர்கள் எல்லோரையுமே கிறீஸ்தவர்கள் ஆக்கியும் விடலாம் என்ற ஆசையும், தானியேல் உபாத்தியாயரின் நியமனத்தால் சாதி இந்துப்பிள்ளைகள் பாடசாலையைப் பகிஷ்கரித்து விட்டால் என்ன செய்வது என்ற அச்சமும் முகாமைக்

காரரை ஒரு முடிவுக்கும் வராதபடி செய்துகொண்டிருந்தன.

மகேஸ்வரன் இந்தப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புப் படிப்பை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் மணிவாசக ஆங்கிலக் கல்லூரியில் தனது ஆங்கிலக் கல்வியை ஆரம்பித்து இப்பொழுது ''சீனியர்'' வகுப்பிற் படித்துக்கொண்டிருந்தான். இக்கல்லூரியில் மகேஸ்வரனுக்கு உயிர்த்தோழன் ஒருவன் உண்டெனில், அவன் உமாபதி என்ற தாழ்த்தப்பட்ட சமூக மாணவனே அல்லாமல் வேறு யாராகவும் இருக்கமுடியாது. இந்தக்கல்லூரி சென்ற ஆண்டிலேதான் அதன் வெள்ளிவிழாவைக் கொண்டாடியது. வெள்ளிவிழா வரை எந்தத் தாழ்த்தப்பட்ட பையனையும் சேர்த்துக் கொள்ளவில்லை என்ற பெருமையோடு அது நடந்துவந்தது. ஆனால், இக்கல்லூரியும் சமீபத்திலே நிகழ்ந்த தடுக்கமுடியாத ஒரு சம்பவத்தால் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகள் கல்வி கற்பதற்கும், விடுதியிலே தங்கி வசிப்பதற்கும் உரிமை அளித்துவிட்டது.

கல்லூரி மனேஜர் சம்பந்தநாதர் பிற்போக்கு மனப்பான்மை கொண்ட யாழ்ப்பாணச் சாதி இந்துக்கள் மத்தியிலே மிகுந்த செல்வாக்குடையவர். அதனால் அவர் துணிந்து ஒரு கருமத்தைச் செய்யின் மற்றவர்கள் அதனை ஆட்சேபிப்பதில்லை. செல்வாக்குடையவரே அல்லாமல் செல்வமுடையவர் அல்லர். ஆனால், பெரிய தனவந்தர் என்று பட்டினத்திலே பேசிக்கொள்வார்கள். அவருடைய வருமானத்தைப் பற்றிய அந்தரங்கம் கல்லூரியிற் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குத் தெரியாததன்று. இவரின் தந்தையார் சிங்கப்பூரிலே ஒரு சிறிய உத்தியோகம் பார்த்தவர். உத்தியோக ஓய்வுபெற்று யாழ்ப்பாணததிற்கு மீண்டபோது இக் கல்லூரிக்கென்றே பெரும் பொருளைச் சிங்கப்பூரிலுள்ள சைவாபிமானிகளிடம் பெற்றுவந்தார். தந்தையார் இறந்த பின்புதான் சம்பந்தநாதர் கல்லூரி மனேஜர் ஆனார். இப்பொழுது கல்லூரி இவருடைய சொந்தச் சொத்து. ''சாதி குலப்பிறப் பென்னும் சுழிபட்டுத் தடுமாறும்......'' என்

றும், ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்னுஞ் சைவத்திருமுறைகளிலே பெரியார்கள் கூறிய அமுதமொழி களும், இந்துமதத்திலே இடைக்காலத்திலே புகுந்துகொண்டு அதன் புனிதத்தன்மையை மாசுபடுத்திய தீண்டாமையை நாட்டைவிட்டு ஓட்டத் தவங்கிடந்து அதிலே பூரண வெற் றியும் பெற்ற காந்திரிஷியின் போதனைகளும், ஒருவித மாற்றத்தையும் உண்டாக்காத இவர் மனத்தைச் சில மாதங்களுக்கு முன்பு தேர்தல் ஏசண்டுகள் சிலரின் தூண்டு தலால் ஏற்பட்ட பதவிமோகம் ஒரு கலக்குக் கலக்கிவிட் டது. புதிய பாராளுமன்றத் தெரிவுக்கு ஓர் அபேட்சகராக முன்வந்திருந்த சம்பந்தநாதர். தமது தொகுதியிலுள்ள வாக்காளரின் அட்டவணையைப் புரட்டித் தமக்கும் தமக்கு எதிராகப் போட்டியிட நிற்பவருக்கும் ஆதரவாய் இருக்கும் வாக்காளர்களைக் கணக்கிட்டபோது தாம் ஒரு முந்நூறு வோட்டுக்களால் தோற்றுப்போவது நிச்சயம் என்று கண்டு கொண்டார். போட்டிக்கு நில்லாமல் விலகிவிடவும் மனம் இடந்தரவில்லை. இந்த நிலைமையில் இருந்தபோது இவரு டைய ஏசண்டுகளுள் ஒருவராகிய குட்டித்தம்பி அங்கு வந் தார். இந்த விசயமாகக் குட்டித்தம்பியோடு ஆலோசனை நிகழ்த்தினர். அப்போது குட்டித்தம்பியின் மூளையிலே ஒரு யோசனை பளிச்சென்று உதயமாயிற்று. அதன் பயனாகவே உமாபதியும் வேறுஞ்சில தாழ்த்தப்பட்ட சைவமாணவர் களும் இந்தக் கல்லூரியில் இடம்பெறலாயினர்.

பட்டின எல்லையிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் இருந்தது புத்தோடை என்ற பெருங்கிராமம். இங்கு, தாழ்த் தப்பட்டவர்கள் மட்டும் நூறு குடிகளுக்கு அதிகமாக உண்டு. இவர்களில் ஏறக்குறைய முந்நூறு வாக்காளர் இருந்தனர். தாம், முந்நூறு வாக்குக்களால் தோற்கக் கூடும் என்று சம்பந்தநாதர் கூறியபோது குட்டித்தம்பியின் கவனம் இந்தத் தாழ்த்தப்பட்டவர்களின் மீது விழலாயிற்று. ''அவர்கள் தங்கள் முந்நூறு வாக்குகளையும் ஒரே மனமாக மற்ற அபேட்சகருக்கு அளிக்கப் போகிறார்கள்'' என்ற வதந்தியும் ஊருக்குள்ளே அடிபட்டது. அவர்களை மட்டும்

தங்கள் பக்கந் திருப்பிவிட்டால் வெற்றி நிச்சயம். ஆனால் அவர்களைத் திருப்ப வழி என்ன? என்ற கேள்விக்கு விடையாகவே, ''கல்லூரியைத் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குத் திறந்துவிட்டுக் கிராமத்திலுள்ள அந்த முந்நூறு வாக்குகளையும் பெறுதல்'' என்ற யோசனையே குட்டித்தம்பிக்கு உண்டானது.

இந்த யாழ்ப்பாணப் பட்டினத்திலே எத்தனையோ பல தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்வியூட்டி அவர்களையும் முன்னேறச் செய்த கிறீஸ்தவர்களின் கல்லூரி ஒன்றிலே ''சீனியர்'' வகுப்பிற் படித்துக்கொண்டிருந்த உமாபதி, தாயாரின் நோயும் குடும்பத்திலே ஏற்பட்ட இடைஞ்சலுங் காரணமாக மூன்று மாதங்களுக்கு மேலாகக் கல்லூரிக்குப் போய் படிக்க முடியாமல் வீட்டிலே தங்கவேண்டி நேரிட்டது. இதற்கிடையில் வேறுசில புதிய மாணவர்கள் ''சீனியர்'' வகுப்பிலே சேர்ந்து கொண்டதால், பிந்திவந்த மாணவர்கள் பலருக்கு இடமில்லை என்று சொல்லித் திருப்பிவிட்டார்கள். இவர்களிலே தாழ்த்தப்பட்ட மாணவன் உமாபதி ஒருத்தனே. மற்ற மாணவர்கள் இங்கொருவனும் அங்கொருவனுமாகச் சைவக்கல்லூரிகளிற் சேர்க்கப்பட்டனர். உமாபதிக்கு ஓர் இடமும் கிடைக்கவில்லை. சிறுவனின் படிப்புத் தடைப்பட்டுவிட்டதே என்று ஏக்கமடைந்திருந்த அவன் தகப்பனாரைக் குட்டித்தம்பி சந்தித்துப் பேசியதன் விளைவாகவே இப்பொழுது உமாபதியும் வேறு சில தாழ்த்தப்பட்ட மாணவர்களும் மணிவாசக ஆங்கிலக் கல்லூரி மாணாக்கராயினர்.

சிவஞானசுந்தரம் பீ. ஏ., பீ. எஸ்ஸி இலங்கைச் சர்வகலாசாலையிலே சேர்ந்து பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட பின், கொழும்பு அரசினர் ஆசிரியர் பயிற்சுக் கலலூரியிலும் பிரவேசித்து ஆசிரியப் பயிற்சியும் பெற்று, யாழ்ப்பாணம் வந்ததும் மணிவாசகர் ஆங்கிலக் கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சர்வகலாசாலையிலிருந்து வெளிவந்தபோது பணம்படைத்த ஓர் உத்தியோகஸ்தருக்கு மருமகனாகும் சந்தர்ப்பமும், அந்த உத்தியோகஸ்தர் மூலமா

கக் கொழுத்த சம்பளமுள்ள ஓர் அரசாட்சி உத்தியோகம் பெறும் வாய்ப்பும், இவரை வீடுதேடி வலியவந்தும் இவர் அந்த இரண்டையும் நிராகரித்துவிட்டார். காந்தீயத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்த இவர், யாழ்ப்பாணத்திலே நிலவும் கொடிய சாதிபேதத்துக்கும் சமயச் சச்சரவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கத் தகுதி வாய்ந்தவர்கள் இளைஞர்களே என்ற திடநம்பிக்கையுங் கொண்டிருந்தார். இந்த நம்பிக்கையே இவரை ஆசிரியப் பயிற்சி பெற்று ஆசிரியராகத் தொண்டாற்றுமாறு தூண்டியதாகும். மண், பெண், பொன் என்னும் மூவாசைகளையும் இளமையிலேயே துறந்து கல்லூரி மாணவர்களின் முன்னேற்றத்துக்காக இவர் ஆற்றி வந்த சேவைகள் மாணவர் உள்ளத்தை மிகுதியுங் கவரலாயின. இதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்த ஆசிரியப் பெருந்தகை தமது உயர்நோக்கங்களைப் படிப்படியாக மாணவர் உள்ளத்திலே படியவைத்தார். எடுத்ததற்கெல்லாம், ''இந்தியாவைப் பாருங்கள்; காங்கிரசைப் பாருங்கள்; காந்தியடிகளைப் பாருங்கள்'' என்று சொல்லிக்கொண்டிருந்தார். ஆசிரியர் சிவஞானசுந்தரத்தினால் புனிதர்களாக்கப்பட்டிருந்த அக்கல்லூரி மாணவர்களுக்குத் தாழ்த்தப்பட்ட பிள்ளைகளின் பிரவேசம் குதூகலத்தையே அளித்தது. இதனால் என்ன அனர்த்தம் நேரிடுமோ என உள்ளூரப் பீதியடைந்திருந்த மானேஜர், சாதி இந்து மாணவர்களினதும் தாழ்த்தப்பட்ட மாணவர்களினதும் அந்நியோன்னியத்தைக் கண்டு எல்லாம் தம்முடைய அதிகாரத்தின் விளைவேயென ஆறுதலடைந்தார்.

திருச்செந்தூர் முருகப்பெருமான் திருக்கோயில் ஹரிஜனங்களுக்குத் திறக்கப்பட்ட நாட்களில் வீட்டுக்குச் சென்றிருந்த மகேஸ்வரன, தங்கள் வீரப திரர் ஆலயத்தையும் திறந்துவிட வேண்டும் என்பதையிட்டு முதன் முதலாகத் தகப்பனுரோடு பேசினான். அப்பொழுது இருவருக்குமிடையிற் பெரிய விவாதம் ஏற்பட்டது பஞ்சாட்சர ஐயருக்கு மகேஸ்வரன் பிறப்பதற்கு முன்பு ஆணும் பெண்ணுமாய் ஆறுபிள்ளைகள் பிறந்து பிறந்து இறந்துவிட ஏழாவது


பிள்ளையாகப் பிறந்தவன் மகேஸ்வரன். மகாபக்தராகிய தாம் புத்தென்னும் நரகத்திலே விழாதபடி காப்பாற்ற வீரபத்திரரே மகேஸ்வரனுக அவதாரஞ் செய்துள்ளார் என்பது ஐயரின் நம்பிக்கை. இன்றுவரை ஐயரோ மனைவி யாரோ மகனுடைய எண்ணத்துக்கு மாருக நடந்தறியார் கள். இதுவும், இந்த யாழ்ப்பாணத்துக்கே வழிகாட்டக் கூடிய இப்பெரிய கருமத்தில் தகப்பனுரை நெருக்க அவ னுக்குத் துணிவை உண்டாக்கியவற்றுள் ஒன்ருகும். மகேஸ் வரன் எவ்வளவோ எல்லாம் எடுத்துக்கூறியும் ஐயர் ஆல யத்தைத் திறப்பதற்கு உடன்படாததைக் கண்ட அவன் கடைசியில் ஒரு பெரிய வெடிகுண்டை ஐயர் முன்பாகப் போட்டுவிட்டான். ''பத்துத் தினங்களுக்குள் ஆலயத்தைத் திறக்கவேண்டும், இல்லையேல் உண்ணுவிரதம் மேற்கொண்டு உயிர்துறப்பேன். இது சத்தியம்'' என்று பிரதிக்ஞை செய்து கொண்டான். கத்தியின்றி இரத்தமின்றி யுத்தஞ் செய்து வெற்றியை ஈட்டிக்கொண்ட காந்தியடிகளின் ஒப்பற்ற கடைசி ஆயுதமல்லவா? ஐயர் கதிகலங்கிவிட்டார். 'மகனே சற்றுப் பொறுத்துக் கொள், சிதம்பரம் இன்னும் திறக்கப் படவில்லையாமே, அது திறக்கப்பட்டதும் நாங்களும் எங் கள் கோயிலைத் திறந்துவிடுவோம்' என்று வாக்குப்பண்ணி மகனைச் சமாதானப்படுத்தினுர் அவர். எந்தக்கோயிலை எவர்தாம் திறந்தாலும் சிதம்பரத்தைத் தீக்ஷிதர்கள் ஒரு போதும் திறக்கப்போவதில்லை என்பது ஐயரின் எண்ணம்.

ஐயரின் இந்த எண்ணத்திலும் மண் விழுந்து போயிற்று. சிதம்பரம் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்ட செய்தி பத்திரிகைகளிற் கொட்டை எழுத்துக்களிலே வெளிவந்ததும் மகேஸ்வரன் கல்லூரியில் ''லீவு'' பெற்றுக் கொண்டு வீட் டுக்கு வந்து முன்பு கூறியவாறு தகப்பனுரோடு பேசிக் கொண் டிருந்தான். மகேஸ்வரனுக்கு மறுமொழி ஒன்றுஞ் சொல்லித் தட்டிக்கழிக்க முடியாமல் அகப்பட்டுக் கொண்ட ஐயர், அடுத்தநாள் முடிவு சொல்லுவதாகக் கூறிவிட்டு யாரையோ சந்திப்பதற்காக வெளியே போனுர். ஊரிலுள்ளோர் பல ரோடு ஆலோசித்த அளவில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயம் மகேஸ்வரனுக்குச் சாதகமாகவே இருந்தது. அருணுசலம்பிள்ளை முதலிய சிலர் மட்டும் எதிர்த்தார்கள். மறுதினம் தினசரிப் பத்திரிகையில் கொழும்பு விவேகா னந்த சபையார் ஆலயப் பிரவேசத்தை ஆதரித்துச் செய்து

கொண்ட தீர்மானம் வெளிவந்திருந்ததால் அருணாசலம் பிள்ளை முதலியவர்களும் ஆதரவு காட்டத் தொடங்கினர். அன்றியும் ஹரிஜனங்களை ஆலயத்திலே பிரவேசிக்க விடுவதால் உண்டாகும் சரித்திரப் பிரசித்தி பெறும் — புகழ் இந்த யாழ்ப்பாணத்திலே தங்கள் ஊருக்கே முதலிற் கிடைக்கிறது என்றதற்காக இவ்விஷயத்தில் அதிக ஊக்கமும் எடுத்துக் கொண்டார்கள்.

ஆலயப் பிரவேசத்திற்கு ஒரு தேதி குறிக்கப்பட்டு விளம்பரங்கள் விநியோகிக்கப்பட்டன. அந்தத் தினத்தில் ஊரிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களும், வெளியூர்களிலுள்ள பல சமூகத்தவர்களும் அங்கு வந்திருந்தனர். மணிவாசக ஆங்கிலக் கல்லூரி ஆசிரியர் சிவஞானசுந்தரமும் மாணவர்களும் இதிற் பங்குபற்றிக் கொண்டார்கள் என்பது சொல்ல வேண்டியதில்லை. ஆலயப் பிரவேசம் மிக்க பக்தி சிரத்தையுடன் விமரிசையாக நடந்தேறியது, அந்த வைபவத்தையொட்டிக் கோயில் மண்டபத்திலே ஆசிரியர் சிவஞானசுந்தரம் தலைமையில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நிகழ்ந்தது. கூட்டத்திலே மகேஸ்வரனுடைய அருந்தொண்டைப் பாராட்டி பலர் பேசினர். தாழ்த்தப்பட்டவர்களின் பிரவேசத்தால் வீரபத்திர கோயில் புனிதமடைந்துவிட்டதால், இனிமேல் அங்கு பலியிடும் வழக்கத்தை நிறுத்த வேண்டுமென்றும், சிற்றூர்ப் பாடசாலையிலே இப்பொழுது இரண்டு ஆசிரியர்களுக்கு இடமிருப்பதால் தானியேல் உபாத்தியாரையும் தாழ்த்தப்பட்ட சைவ உபாத்தியாரையும் அங்கு நியமிக்க வேண்டுமென்றும் கொண்டுவரப்பட்ட இரு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. கூட்டத்திலே பேசியவர்களுள் உமாபதியும் ஒருவன். தலைவர், அவனைத் தாழ்த்தப்பட்டவன் என்று சபையினர்க்கு அறிமுகஞ் செய்து வைத்தபோது பஞ்சாட்சரஐயர் அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்ததை ஒருவருங் கவனிக்கவில்லை. ஐயரின் வீட்டுக்கு ஏற்கெனவே இரண்டொரு தடவை மகேஸ்வரனுடன் கூடிக்கொண்டு வந்திருந்தவனும், அப்பொழுதெல்லாம் கோயிலுக்கும் வந்து உட்புகுந்து வணங்கிச் சென்றவனுமாகிய அதே இளைஞன் தான் இந்த உமாபதி என்பதில் ஐயருக்கு ஐயமே உண்டாகவில்லை.

ஈழகேசரி 28-9-1947, 5-10-1947



''புலவர்'' என எல்லோராலும் மதிப்புரிமையுடன் அழைக்கப்பெற்று வந்த சைவப் புலவர் சி. வல்லிபுரம் அவர்கள் எனது பெருமதிப்புக்குரிய பேராசான். நல்லாசிரியருக்கு உதாரணமாகத் திகழ்ந்த புலவர் அவர்கள் ஆழ்ந்தகன்ற தமிழ்ப் புலமையும், ஆங்கிலம், சிங்களம், வடமொழி, ஆதியாம் மொழிகளிற் பரிச்சியமும் உடையவர்கள். முப்பதுகளின் ஆரம்பத்திலிருந்து தமது பெயரிலும் ''சில்வரம்புலி'' ''வதிரிசிவம்'' என்னும் புனைபெயர்களிலும் இலக்கிய ஆக்கங்களை உருவாக்கி வந்திருக்கும் புலவர் அவர்களின் படைப்புக்கள், தூதன், கரந்தீயம், சைவபோதினி, ஈழகேசரி, ஈழநாடு, வீரகேசரி, தினகரன் என்பவற்றில் அவ்வப்போது வெளிவந்திருக்கின்றன.

கடந்த 29-01-90 இல் அமரத்துவமடைந்த புலவர் அவர்களின் ஒரு தொகுப்பே, இந்தப் ''புலவர் தேறல்'' கவிதைகள், கட்டுரைகள், சிறுகதை என்பவைகளை உள்ளடக்கியது இந்த நூல். ஆன்மீகம், காந்தீயம், சமுகம் என்பன இந்நூல் ஆக்கங்களின் கருப்பொருளாக அமைந்துள்ளன. ஆன்மீக பலத்துடன், காந்திய வழியில் சமுக மேம்பாடு காணவிழையும் இலக்கு, இந்த ஆக்கங்களிற் பெருமளவு காணப்படுகின்றது. இத்தகைய பண்பானது முப்பது — நாற்பதுகளில் யாழ்ப்பாணத்துச் சமுக நிலை நின்று, 'பேசத்தகுந்ததாய்ப் பேசும்' இயல்பினைச் சுட்டி நிற்பதனையும் உணரலாம். இந்த நூல் புலவர் அவர்களின் இலக்கியச் சுவட்டினைப் பதிவு செய்வதோடு, இலக்கியச் சுவைஞர்களுக்கு நல்ல தேறலாகவும் அமைகின்றது.

—தெணியான்

அபிராம் அச்சகம் — அல்வாய்